குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள்

[மலர் 39] சித்தார்த்தி ஆண்டு மாசித்திங்கள் 10—3—80 [இதழ் 4

கும்பகோணம் மகாமகப்பெருவிழாவில்

தருமை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம். காஞ்சிபுரம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம்
திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் ஆகியோர்களைப்
பக்தர்கள் பூர்ணகும்ப மரியாதையுடன் வரவேற்றல்.

தருமையாதினக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 39 || 10—3—80 || இதழ் 4

உட்பொருள்

எண்		பக்கம்
1	ஆன்மிக வளர்ச்சிக்கு ஆபத்து வரலாமா?	145
2	அன்னை அருள்மாலை	150
3	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை	151
4	மாயூரம்-குமரக்கட்டளை திருவிளக்கு அறக் கட்டளை அறிவிப்பு	158
5	கடிதங்கள் ...	160
6	திருத்தருமபுரம், திருநள்ளாற்றுத் தலச் சிறப்புக்கள் ...	161
7	அபிராமி அந்தாதி ...	173
8	நெஞ்சே நீ கேள்! ...	179
9	செய்திகள் ...	180
10	2200 ஆண்டு பழமையான கோயில் கண்டுபிடிப்பு ...	185
11	எதிர்காலம் ...	186
12	வைத்தீசுவரன்கோயில் திருவிளக்கு அறக் கட்டளை அறிவிப்பு	191
13	பார்வையாளர் குறிப்பு	157, 178, 192

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—★—

எல்லாம் உனதுபதம்
எல்லாம் உனதுசெயல்
எல்லாம் உனதருளே
என்றிருந்தால் — பொல்லாத
மாதுயரம் நீங்கும்
மருவும் உனதடிக்கே
ஆதரவாய்ச் சொக்கநாதா,

—சொக்கநாத வெண்பா. 62

ஆசிரியர் :-
வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்.

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 9.
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 11.
ஆண்டுச் சந்தா வெளிநாடு ரூ. 17.
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100.
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 125.

கும்பகோணம்

மகாமகப்பெருவிழா

★

தருமையாதீனம்

ஸ்ரீலஸ்ரீ

குருமகாசந்நிதானம்

மகாமக தீர்த்தத்தில்

திருமஞ்சனமாட

எழுந்தருளுதல்,

1—3—80

மகாமக தீர்த்தத்தில் திருமஞ்சனமாடிப் பஞ்சமூர்த்திகளை வழிபடுதல்.

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 39 | சித்தார்த்தி - மாசி - 10—3—80 | இதழ் 4

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

ஆன்மிக வளர்ச்சிக்கு ஆபத்து வரலாமா?

இந்தியாவின் ஆன்மிகச் சிறப்பு

உலக அரங்கில் நமது இந்தியத்திருநாடு புகழ்மிக்கதாக விளங்குகின்றது. இந்தியநாட்டின் சிறப்பிற்கு எவை அடிப்படைக் காரணங்கள்? இது செல்வச்செழிப்புமிக்க நாடுகளில் ஒன்றா? இல்லை! உலக அறிவியல் வளர்ச்சியில் நம்நாடு உலகுக்கு வழிகாட்டி நிமிர்ந்திருக்கிறதா? அதுவும் இல்லை! வியப்பூட்டும் உலகியல் சாதனைகளை நாம் நிகழ்த்தியிருக்கின்றோமா? இல்லையே! அப்படியானால், நமது நாட்டின் பெருமைக்கும், உலக மக்களை இது பெரிதும் ஈர்ப்பதற்கும் வேறு அடிப்படை என்ன என்று சிந்திக்கவேண்டாமா? அமைதியாகச் சிந்திக்கின்றோம்! விடை கிடைக்கிறது! இந்தியநாட்டின் பெருமை எல்லாம் இந்நாட்டின் ஆன்மிக வளர்ச்சியில்தான் என்பது

" தொன்மையவாம் எனும்எவையும் நன்ருகா; இன்று
தோன்றியநூல் எனும்எவையும் தீதாகா "

எனப் பேசுகின்றது சித்தாந்த சாத்திர நூலாகிய சிவப்பிரகாசம்.

பழமையில் காலத்திற்கு ஏலாதன தாமே மெல்ல மெல்ல மறைந்து விடுகின்றன. காலத்திற்கேற்ற புதியவைகள் தாமே வந்து இணைகின்றன.

" பழையன கழிதலும், புதியன புகுதலும்
வழுவல; கால வகையினுனே "

என்பார் நன்னூலார். ஆன்மிகத்துறை காலத்திற்கு ஏற்பப் பல வற்றில் மாற்றங்களை விரும்பி ஏற்றுக்கொண்டு வளர்ந்து வந்திருக் கிறது. ஆனுல் இந்நாட்டில் சிலர் இந்த அடிப்படைகளையே உணராதவர்களாய், பழையனவற்றைக்கழித்துவிட்டுப், புதுமைகளைப் புகுத்திவிட வேண்டுமென்று முயன்று, தம் முயற்சி வெற்றி பெருத போது ஆன்மிகத்துறைமீதே வெறுப்புக் கொண்டு இதனை வளர வொட்டாது தடுக்கத் தங்கள் அதிகாரத்தையும் ஆற்றலையும் பயன் படுத்தி வருகிருர்களோ என்று நினைக்கவேண்டியுள்ளது.

ஆட்சியாளர்கள் செய்த தீமைகள்

தென்னுடும், குறிப்பாகத் தமிழ்நாடும் ஆன்மிகத்துறையில் முன்னணியில் நிற்பவை. தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான சைவ-வைணவத்திருக்கோயில்களும், மற்றும் சிறு தெய்வக்கோயில்களும் எங்கும் நிறைந்துள்ளன. ஆன்மிக வளர்ச்சியின் அடித்தளங்களாக விளங்கி, மக்களின் பண்பாட்டு நெறியை வளர்த்துவரும் இத்திருக் கோயில்களும், இவை ஒத்த திருமடங்களும் கடந்த முப்பது ஆண்டு களுக்கும் மேலாக ஆட்சியாளர்களாலும், அரசியல்வாதிகளாலும் எவ்வாறெல்லாம் அலைக்கழிக்கப்பட்டுவருகின்றன என்ற வரலாற்றை மக்களுக்கு அறிமுகப்படுத்தவேண்டிய கடமை ஞானசம்பந்தத்திற்கு உண்டு. பக்தி மற்றும் பண்பாட்டில் நாட்டமில்லாதவர்களும், தன்னல நோக்கங்கொண்டவர்களும், அவரவர் பங்காகச்செய்து வைத்துவிட்டுப்போன தீமைகள் பலப்பல. அவற்றை விரிப்பின் பெருகும்.

யார் குற்றவாளி?

தமிழகத் திருக்கோயில்களும் ஏனைய அறநிலையங்களும் பெரும் பாலும் நிலவருவாயை அடிப்படையாகக் கொண்டு இயங்குவன.

இவற்றின் நிலங்களை உழுது பயிரிடுபவர்களின் ஆதரவினை அரசியல் ஆதாயங்களுக்காகப் பெறவேண்டியவர்கள் பல வேடிக்கையான சட்டங்களை இயற்றினர். குத்தகை பாக்கியா ! தள்ளுபடிசெய்து சட்டம் போடுகிறோம் ! கடன் பாக்கியா ! தள்ளுபடிசெய்து சட்டம் போடுகிறோம் ! இப்படிப் போட்ட சட்டங்களால் லாபமடைந்தவர்கள் இன்று சட்டம் போட்டவர்களுக்கே சவால் விடுகின்றனர். ஆம் அரசு கூட்டுறவு வங்கிகள் மூலமாக வழங்கிய சுமார் 50 கோடி ரூபா கடன்களைக் கட்டமறுத்து, இன்று அவற்றைத் தள்ளுபடிசெய்து விடுங்கள் என்று மக்களைப் போராடவைத்த குற்றத்திற்கு யார் பொறுப்பு ? வினைவிதைத்தவன் வினை அறுப்பான் என்ற பழமொழியின் உண்மை இப்போதாவது அரசுக்குப் புரிந்திருக்கவேண்டும். தனிமனிதர்களுக்கும், ஏழை நிலவுடைமையாளனுக்கும், திருக்கோயில் அறச்சொத்துக்களுக்கும் தீங்கு விளைவிக்கும் சட்டங்களை அறவுணர்வின்றித் தொடர்ந்து நிறைவேற்றிய அரசுகளே இன்றைய விவசாயிகளின் அரசுக்கு எதிரான போராட்டத்திற்கு வித்திட்டவர்கள் என்று மக்கள் கருதுகின்றனர். அரசுக்கு வரி கொடுக்க வேண்டாம் என்று நாம் கூறவரவில்லை. மக்களை அறவுணர்வுடையவர்களாக வளர்க்க வேண்டியதன் இன்றியமையாமையையே நினைவூட்டுகின்றோம்.

அநீதிக்கு எதிர்ப்பு

அறங்கள், அதனை நிறுவியவனுடைய விருப்பப்படி நடைபெற வேண்டும் என்பதே நியதி அவ்வறங்கள் தடைப்படாது நடைபெற உதவவேண்டிய கடமை அரசுக்கு உரியது. கோயில் நிலங்கள் அறவுணர்வுகொண்ட பெரியோர்கள் பல காலங்களில் சிறுகச் சிறுக வழங்கியதனால் வந்தவை. கும்பகோணத்துக்குப் பாயச்செல்லும் நீரைக் குறுக்கே அடைத்துக் கொள்ளிடத்தில் பாய்ச்ச முனைவது ஒருவகையில் அறமற்ற களவேயாகும். நிதிகொடுத்தவன் விருப்பத்துக்கு மாறாக அறநிலைய நிலங்களை உழுபவனுக்கே சொந்தமாக்குவோம் என்று பேசுதலோ, அல்லது உழுபவனை உடையவனுக்குக் கொடுக்காதே என்று தூண்டுவதோ அறத்துக்கு மாறானவை மட்டுமன்று ; அநீதியுமாகும். இவ்வாறான அநீதிகளை எதிர்த்துக் குரல் கொடுக்கும் திண்மையும் மனஉறுதியும், இந்நாட்டில் ஆன்மிக அடிப்படையில் நம்பிக்கைகொண்ட ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும்.

பிரார்த்தனை

சிறுநிலவுடைமையாளர்களும், அறநிலையங்களும் பத்திரிக்கைகளும், உண்மைநிலையைப் பலவாறு எடுத்துக்கூறியும், அரசு போகிற போக்கில் 25–75 என்ற குத்தகைச் சட்டத்தை அவசர அவசரமாக

நிறைவேற்றிவிட்டுப்போயிருக்கிறது. எந்த ஒரு மாற்றத்தைச் செய்வதானாலும், சான்றோர்களையும், சட்டத்தால் பாதிக்கப்படக்கூடியவர்களையும் கலந்து ஆலோசித்துக் கூடியவரையில் எத்தரப்பினரும் பாதிக்கப்படாதவகையில் அதனைச் செய்யவேண்டியது ஒரு பொறுப்புமிக்க அரசின் கடமையாகும். ஆனால், அதனைச்செய்யாது, ஒரு சாராரை மகிழ்விக்கவேண்டும், அரசியல் ஆதாயம் கிடைத்திடவேண்டும் என்பனபோன்ற உள்நோக்கத்தோடு இச்சட்டம் நிறைவேறியிருக்கிறது. 'அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண்ணீர் அன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை' என்ற குறளுக்கு ஏற்ப இவ்வாறான முடிபுகளை எடுத்த பல அரசுகள் உடனுக்குடன் வீழ்ச்சியுற்று வருவதையே கடந்த 20 ஆண்டு வரலாறு நமக்குக்காட்டுகின்றது. இப்போது 25-75 அவசரச் சட்டத்தை நிறைவேற்றிவிட்டு ஆண்டு கொண்டிருந்த அரசு பதவி இழந்திருக்கிறது. இத்தகு முரண்பாடுகள் இல்லாத அரசு அமையவும், முரண்பாடுகளைக் கண்டு தட்டிக் கேட்கும் உணர்வு மக்களிடையே பெருகவும் இறைவன் அருளவேண்டுமென்று அனைவரும் பிரார்த்திப்போம்.

அரசியலார்க்கு அறவுணர்வு பெருகுவதாக.

அறநிலையங்கட்காவது விதிவிலக்கு கிடைப்பதாக.

அன்னை அருள்மாலை

திருமுறைக்கலாநிதி
வேலூர் திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.

அண்டத் தவர்வழி படுந்திருக் கானப்பே
ரகலாத சொர்ணவல்லி
ஐங்கரன் தந்தைமகி ழுந்திருப் பூவணம்
அழகேறு மின்னனையாள்
தொண்டர்பலர் கூடித் தொழுந்திருச் சுழியல்
துணைமாலை யம்மை அருவி
சொரிகின்ற குற்றலம் குழல்வாய் மொழியம்மை
தூயநெல் வேலிநீல
கண்டனு ரகமகிழும் காந்திமதி யம்மையே
கைதொழும் அஞ்சைக்களம்
கருத்திலுறை யுமையம்மை கண்ணிலுறை அவிநாசி
கருணைநிறை கருணாம்பிகை
பண்டைமறை பரவுதிருப் பவளவாய்ச் செல்வியே
பண்ணிலுறு பெண்ணமுதமே
பஞ்சின் மெல் லடியிணையைத் தஞ்சம் அடைந்தென்றும்
பணிவேற் கருள் அன்னையே. (26)

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் திருமை ஆதீனம்

26-ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

ஈரோடு அருள்நெறித் திருக்கூட்டத்தினர்
தருமையாதீனத் திருமடத்தில்
குரு லிங்க சங்கம வழிபாடு நிகழ்த்தியபோது
வழங்கியருளிய

ஆசியுரை

2—3—80

" பால்நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ஒளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யான்உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே "

சமயம் ஏன் ?

முன்னோர்கள் குறைந்த வருவாயிலும் குறைந்த வசதியிலும் நிறைவாக வாழ்ந்தார்கள். வாழ்க்கையோடு இயைந்த சமய நம்பிக்கையில் விரதங்கள் என்று அமைத்துக்கொண்டு உடலையும் உணர்வையும் கட்டுப்படுத்தும்கலையில் தேர்ந்து வாழ்ந்தனர். அதனால் அவர்கள் வாழ்வில் உடற்பிணியும் உளக்குமுறலும் மிகமிகக் குறைவாகவே இருந்தன.

ஆனால் இன்றைய மக்கள் தாம் பெறும் வருவாயிலோ அல்லது அமைத்துக்கொண்ட வாழ்க்கை வசதிகளிலோ முன்னோர்களைவிடக் குறைந்தவர்கள் அல்லர். எனினும் அன்றுடம் உடற்பிணியாலும் உளத்தளர்வாலும் துன்புறுகின்றனர். இதற்குக் காரணம் என்ன என்று சிந்தித்துப்பார்ப்பது ஒவ்வொருவரின் கடமையாகும்.

மனிதன் தன் ஆற்றலாலும் அறிவுநுட்பத்தாலும் பல கருவிகளைக் கண்டுபிடித்து வாழ்க்கையை வளமாக்கிக்கொண்டான், ஆனால் அவன் மனத்தில் நிம்மதி இல்லை. அந்த நிம்மதியைச் சமயம் ஒன்றுதான் தர முடியும். இதனைப் பலரும் இன்று உணர ஆரம்பித்துள்ளனர்.

அருளைப்பெற அமைந்த நெறிகள்

அத்தகைய சமயமும் உயிர்களின் தரத்திற்கேற்பப் பலவகைப் படுகின்றது. அவற்றுள் சிறந்ததான சைவ சமயம், ஆண்டவனின் அருளைப் பெறுவதற்குக் கூறும் நெறிகள் இரண்டு. ஒன்று அன்பு நெறி; மற்றொன்று அறிவு நெறி அன்புநெறியைத் தோத்திரநெறி என்றும், இலக்கியநெறி என்றும் சொல்லலாம், அறிவு நெறியைச் சாத்திர நெறியென்றும், இலக்கண நெறியென்றும் சொல்லலாம்.

அன்பு பலவகை

அன்பு என்னும் சொல் பக்தி, காதல், பற்று, பாசம், நட்பு என்று பல நிலையில் பல பெயரில் வழங்கிவருகிறது. ஒருபொருள் பல சொல்லில் எடுத்தாளப்படுமேயானால் அதற்குள்ள காரணங்களை உணரவேண்டும். தண்ணீர்தான் எல்லாவற்றிலும் இருக்கிறது என்றாலும் இருக்கிற இடத்தையும் அமைப்பையும்கொண்டு, குளம் என்றும் கிணறு என்றும் ஆறு என்றும் கடல் என்றும் பலசொல்லால் வழங்கி வருவது போல, அன்பு என்பது ஒன்றுதான் என்றாலும் வைக்கப்படுகின்ற இடமும் நோக்கமும் கருதிப் பலபெயரில் கூறப் படுகிறது.

ஆண்டவன்மீது வைக்கும் அன்பைப் பக்திஎன்றும், நாட்டின் மீதும் மொழியின்மீதும் வைக்கும் அன்பைப் பற்று என்றும், குழந்தையிடமும் உற்றாரிடமும் வைக்கும் அன்பைப் பாசம் என்றும், நண்பனிடம் வைக்கும் அன்பை நட்பு என்றும், பெண்ணின்மீது கொள்ளும் அன்பைக் காதல் என்றும் கூறுவர்.

கடவுளின்மீது வைக்கும் அன்பைக் காதல் எனும் சொல்லாலும் முன்னோர்கள் குறித்துள்ளனர்.

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி"

என்பது ஞானசம்பந்தர் தேவாரம். சுந்தரரும்,

"காதல் செய்து களித்துப் பிதற்றிக் கடிமா மலரிட்டு உனைஏத்தி
ஆதல் செய்யும் அடியார்..."

என்று திருக்கச்சூர் ஆலக்கோயில் பதிகத்தில் 'காதல் செய்து' எனக் குறித்தருளுகின்றார். மணிவாசகரும்,

"காலமுண்டாகவே காதல் செய்து உய்மின்"

என்று மொழிந்தருளுவர். எனவே அடியார்கள் ஆண்டவன் மீது கொள்ளுகின்ற அன்பு நெறிக்கு முன்னோர்கள் 'காதல்' எனும் சொல்லையும் பயன்படுத்தி வந்தனர். இப்பக்தி நெறியைத் தோத்திரநெறி என்று கூறுவர்.

அறிவு நெறி :

அறிவு நெறியை வடமொழியில் ஞானநெறி என்பர். சாத்திர நெறி என்பதும் இதுவே. நம்மில் பக்தி நெறியில் வழிபடுவோர்க்கு அச்சம் இருப்பதில்லை. அறிவுநெறியில் வழிபடுவோர்க்கு அன்பு இருப்பதில்லை. அறிவு நெறியில் அன்பும் அன்பு நெறியில் அச்சமும் வேண்டும். இதனைத் திருவிளையாடல் புராணத்தில் பரஞ்சோதி முனிவர் கீழ்வரும் பாடலால் குறிப்பிடுகின்றார்.

"நிச்சலும் ஈசன் அன்பர் நெறிப்படின் சிறுர்மேல் வைத்த
பொச்சமில் அன்பும் மன்னர் புதல்வரைக் கண்டா லன்ன
அச்சமும் கொண்டு கூசி அடிபணிந்து இனிய கூறி
இச்சையா றொழுகி உள்ளக் குறிப்பறிந்து ஏவல் செய்வார்"

இதையே 'பயபக்தியுடன் சுவாமி கும்பிட்டார்' என நாட்டு வழக்கில் மக்கள் பேசிவருகின்றனர். இதுவே அருளாளர்கள் காட்டிய வழியுமாகும். நல்ல பண்பட்ட உள்ளத்தில் தோன்றும் அன்புநெறி எந்தவகையிலும் அறிவுநெறிக்கு மாறுபட்டுப் போய்விடுவதில்லை. நல்ல உணர்வும் பண்பாடும் உள்ள அறிஞனிடம் தோன்றும் அறிவு நெறி எந்தவகையிலும் அன்புநெறிக்கு மாறுபடுவதில்லை. பத்தி நெறித் தோத்திரங்கள் பாடியருளிய அருளாளர்கள் வாக்கில் அறிவு நெறிச் சாத்திரங்கள் தாமாகவே அமைந்து விடுகின்றன. அவ்வாறே அறிவுநெறிச் சாத்திரங்கள் பாடியருளிய அருளாளர்கள் வாக்கில் அன்புநெறித் தோத்திரங்கள் இயல்பாகவே அமைகின்றன. அறிவு நெறிப்பட்டவர்கள் அன்பு நெறிக்கு மாறுகச் சென்று விடுவதில்லை.

விஞ்ஞானியின் அனுபவம் :-

இந்நிலையினை மெய்ஞ்ஞானத்தில் மட்டுமல்லாது விஞ்ஞான நிலையிலும் காணலாம். வானொலியைக் கண்டுபிடித்த மார்க்கோனி ஒரு செய்தியைக் கூறினார். "நான் இளைஞனாயிருந்தபொழுது என் தந்தையுடன் வழிபாட்டிற்குச் செல்வேன்; அப்பொழுது அவர்

'பரமண்டலத்தில் உள்ள பிதாவே!' என்று அழைத்துப் பிரார்த்தனை செய்வார். அப்பொழுதெல்லாம் இங்குக் கூறும் இப்பிரார்த்தனை எப்படி அங்குச்செல்ல இயலும்? என்று ஐயுறுவேன். வானொலியைக் கண்டுபிடித்த பின்னரேதான் அதன் உண்மையை உணர்ந்து கொண்டேன்" என்று கூறினர். இவரைப் போன்ற அறிவு வயப்பட்ட விஞ்ஞானிகள் கடவுளை வழிபடும் அன்பு நெறியிலும் வாழ்ந்தனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

எது விஞ்ஞானம்?

உண்மையிலேயே விஞ்ஞானம் என்பது ஆண்டவன் படைத்த பொருள்களின் உள்ளார்ந்த இரகசியங்களைக் கண்டு பிடித்து அறிவிப்பதேதவிர வேறில்லை. இல்லாத எதையும் விஞ்ஞானிகள் நமக்குச் சொல்லிவிடுவதில்லை. இருப்பதைப் புரியவைக்கிறார்கள்.

இவற்றால் உண்மையான பக்தன் உண்மையான அறிஞனாயிருப்பான். உண்மையான அறிஞன் உண்மையான பக்தனாயிருப்பான் என்பதைத் தெளிகிறோம்.

இலக்கியமும் இலக்கணமும்

அன்பு நெறியை இலக்கிய நெறி என்றும், அறிவு நெறியை இலக்கணநெறி என்றும் கூறலாம். உயர்ந்தோரின் செம்மையான வாழ்க்கை நெறியே இலக்கியம் எனப்படும். அவ்வாறு நடந்துகாட்டிய செம்மைநெறியைப் பிறரும் பின்பற்றிப் பயன்பெற அம்முறையை மேல்வரிச்சட்டமாக அமைத்து எழுதப்படுவதே இலக்கணம் எனப்படுகிறது.

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

எனும் குறளின் இலக்கணத்திற்கு ஏற்ப நடந்துகாட்டிய இலக்கியம் மகாத்மாகாந்தி அடிகள் போன்றோராவர்.

சட்டம் என்று இப்பொழுது சொல்வதும் இலக்கணம்தான். இவ்விலக்கணம் நடைமுறைக்கு ஒத்ததாகவும், பிறரால் நடக்கக் கூடியதாகவும் இருத்தல்வேண்டும்.

திருமுறை ஆசிரியர்கள்

சைவ சமயத்தைப் பொறுத்தவரையிலும் தோத்திர நெறியினைப் போதித்தவர்கள், சமயாசாரியப் பெருமக்களை உள்ளிட்ட இருபத்தெழுவராவர். இவர்களை வரிசைப்படுத்திக்கூறும் பாட்டு ஒன்று உண்டு.

1திருஞான சம்பந்தர் 2வாகீசர் 3சுந்தரர்
4திருவாதவூரர் மற்றைத்
5திருமாளி கைத்தேவர் 6சேந்தனர் 7கருவூரர்
தெள்ளு 8பூந்துருத்தி நம்பி
வருஞான 9கண்ட ராதித்தர் 10வேணாட்டடிகள்
வாய்ந்த11திரு வாலி யமுதர்
மருவு 12புருடோத்தமர் 13சேதிராயர் 14மூலர்
மன்னு திரு 15ஆல வாயார்
ஒரு16காரைக் காலம்மை 17ஐயடிகள் 18சேரமான்
ஒளிர்19கீரர் 20கல்லாடனர்
ஒண்21கபிலர் 22பரணர்மெய் உண23ரிளம் பெருமானெடு
ஓங்கும் 24அதிராவடிகளார்
திருமேவு 25பட்டினத் தடிகளொடு
26நம்பியாண்டார் நம்பி 27சேக்கிழாரும்
சிவநெறித் திருமுறைகள் பன்னிரண் டருள்செய்த
தெய்விகத் தன்மையோரே.

என்பது அப்பாடல் இவர்கள் அருளிச்செய்ததோத்திரங்கள் பன்னிரு திருமுறைகளாகும்.

சாத்திரங்கள்

சாத்திரநெறியினைப் போதித்தவர்கள் சந்தானசாரியர்களுள் மெய்கண்டார், அருணந்திசிவம், உமாபதிசிவம் ஆகிய மூவரும், திருவியலூர் உய்யவந்தார், திருக்கடவூர் உய்யவந்தார். திருவதிகை மனவாசகங்கடந்தார் ஆகிய மூவரும் ஆக அறுவராவர். இவர்கள் அருளிச்செய்த சாத்திரங்கள் பதினன்காகும். இப்பதினன்கையும் கூறும் பாட்டு ஒன்றுண்டு. அது.

“ உந்தி களிறுயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம் — வந்தவருள்
பண்புவினு போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்பம் உற்று ”

என்பதாகும்.

தோத்திரமும் சாத்திரமும்

தோத்திர நெறியைக் கூறியருளிய சமயாசாரியர்கள் ஒவ்வொரு இடத்திலும் வாழும் மக்களை நாடிச்சென்று பதியுண்மையை அறிவுறுத்தி நல்வழிப்படுத்தினர்கள்.

சாத்திரநெறியைக் கூறியருளிய அருளாளர்கள் இருந்த இடத்திலிருந்தே பக்குவிகளாய்த் தம்மை நாடிவந்தோர்க்கு உண்மைப் பொருள்களை உபதேசம் செய்தருளினார்கள்.

நம் ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஒரு பாடலில் யார்யாருக்கு உண்மைப்பொருள்களைக் கூறவேண்டும் என்பதை மிகவும் தெளிவாகக் கூறியருளுகின்றார்.

" அன்புமிக உண்டாய் அதிலே விவேகமுண்டாய்த்
துன்பவினை யைத்துடைப்ப துண்டாய் — இன்பம்
தரும்பூர ணத்துக்கே தாகமுண்டாய் ஓடி
வரும்கா ரணர்க்குண்மை வை "

எனும் இப்பாடல் நற்பொருளைக்கேட்போரின் தகுதிதனை விளக்கமுறக் கூறுகிறது.

ஆண்டவன் அருளும் நிலை

மணிவாசகர் ஒரு பாடலில் ஆண்டவன் அடியார்களை நாடிச் சென்று அருள்வதையும், நாடிவருவோர்க்கு அருளுவதையும் கூறியருளுகின்றார். " பால் நினைந்தூட்டும் தாயினும் " என்ற பாடலில்,

" பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த செல்வமே சிவபெருமானே"

என்னும் வரிகளால் ஆண்டவன் தானே நாடிவந்து ஊனினை உருக்கியும் உள்ளொளி பெருக்கியும் அருள்பாலித்தான் என்பதையும்,

" யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் "

என்னும் வரியால் தான் தேடிச்சென்று அருள்பெற்றதையும் கூறுகின்றார். இவ்விரண்டு நெறிகளையும் அப்பர் சுவாமிகளும் திருக்குறுந்தொகைப் பாடலில் குறிப்பிடுவது கண்டு மகிழலாம்.

" தேடிச் சென்று திருந்தடி ஏத்துமின்
நாடி வந்துஅவர் நம்மையும் ஆட்கொள்வர்
ஆடிப் பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப் போகும் நம்உள்ள வினைகளே. "

பூனையும் குரங்கும்

உலகியலில்கூட இதுபோன்ற நிலைக்கு உதாரணமாகப் பூனையின் நிலையையும் குரங்கின் நிலையையும் எடுத்துக்கூறுவர். பூனை தகுதியில்லாத தன் குட்டியைத் தானே வாயில் கவ்விக்கொண்டு சென்று காப்பாற்றும் நிலையுடையது. ஆனால் குரங்கோ தன் குட்டி தன்னைச் சிக்கெனப் பிடித்துக்கொள்ள இடம்கொடுத்துத் தன்போக்கிலேயே சென்று குட்டியைக் காப்பாற்றும் நிலையுடையது. இதனை முறையே மாற்சாலநியாயம், மற்கடநியாயம் என்பர் வடநூலார். மாற்சாலம்- பூனை. மற்கடம் - குரங்கு. பொதுவாக மெய்ஞ்ஞான நெறியினைத் தெரிந்தவர்கள் தாமே சென்று பற்றவேண்டும். தெரியாதவர்களைத் தெரிந்தவர்கள் சென்று பற்றி வழிப்படுத்தவேண்டும்.

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்

மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து நிறைவாக வீடுபேறும் அடைய, அன்புநெறியாம் தோத்திர நெறியும் அறிவு நெறியாம் சாத்திர நெறியும் தேவை. எனவே நம் முன்னோர்கள் அருளியுள்ள இரண்டு நெறிகளையும் தகுதிநோக்கித் தெரிந்தெடுத்து அதன்வழி நடந்து மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்தும் எண்ணில் நல்ல கதியைப் பெற்றும் உய்வார்களாக.

வாழ்க அறிவுநெறி ! வளர்க அன்புநெறி !!

பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

ஸ்ரீ பிரமபுரீசுவரசுவாமி தேவஸ்தானம், திருக்குவளை.

எங்கள் திருக்கூட்டத்தின் சார்பாக எட்டு அன்பர்கள் திருக்கோயிலில் வழிபடவந்தோம். தருமையாதீன குருமகாசந்நிதானத்தின் ஆணையின் வண்ணம் திருக்குவளை ஆலய நிர்வாக கண்காணிப்பாளர்கள் திருக்கூட்டத்தை அன்புடன் வரவேற்று வேண்டிய வசதிகள் எல்லாம் செய்து கொடுத்ததோடன்றி, நல்ல முறையில் வழிபாடு செய்துவைத்தார்கள். கோயில் தூய்மையாகச் சிவமணம் கமழும் வண்ணம் இருப்பது கண்டு அகமிக மகிழ்ந்தோம்.

வாழ்க குருமகாசந்நிதானம்! வளர்க சிவநெறி !!

(ஒ-ம்) ரா. ப. தங்கவேலு

3—3—80

ஈரோடு திருமுறைக்கழகம்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான

குமரக்கட்டளை

ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம், மாயூரம்.

திருவிளக்கு அறக்கட்டளை அறிவிப்பு

விளக்கினார் பெற்றஇன்பம் மெழுக்கினால் பதிற்றியாகும்
துளக்கின்நன் மலர்தொடுத்தால் தூயவிண் ணேறலாகும்
விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ஞ்ஞெறி ஞானமாகும்
அளப்பில கீதஞ்சொன் னார்க்கு அடிகள்தாம் அருளுமாறே.

மாயூரம் – குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ வள்ளி தெய்வயானை சமேத ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கலியுகவரதராக - கண்கண்டதெய்வமாகக் காட்சியளித்துக் கருணை பாலித்தருள்கிறார். மாதந்தோறும் ஒவ்வொரு கார்த்திகைத் திரு நட்சத்திரத்தன்றும் நடைபெறும் விசேட ஆராதனைகளைப் பக்தர்கள் தங்கள் உபயமாக ஏற்று ஆர்வத்துடன் செய்து அருள்பெறுகின்றனர். இப்பெருமானுக்குக் கந்தசஷ்டித் திருநாள் மிகச்சிறப்பாக நிகழ்கிறது. அந்த ஆறு நாட்களிலும் நடைபெறும் லட்சார்ச்சனையும் பக்தர்களின் உபயமாகவே நடைபெற்று வருகின்றன. இப்பெருமான் திருவருளில் ஈடுபட்ட தருமையாதீனம் இருபத்தைந்தாவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குரு மகாசந்நிதானம் புதிதாகத் தங்கக்கவசம் செய்வித்து அவ்வப்போது அணிவித்து மகிழ்ந்தார்கள்.

திருவிளக்கின்பயன்

திருக்கோயிலில் அலகிட்டுத் தூய்மைசெய்வோர் மிக்க பலன் எய்துவர்; மெழுகுவோர் அதைவிடப் பத்துமடங்கு பலனை அடைவர்; நறுமணமுள்ள மலர்களை எடுத்து மாலைகட்டி அளிப்போர் விண்ணுலகு ஆள்வர்; திருவிளக்குப் பணிசெய்வோர் மேலான ஞானமார்க்கத்தில் செல்லத்தக்க அறிவைப்பெறுவர்; தோத்திரங்கள் சொல்லித் துதித்து வழிபடுவோர் அடையும் பயன்களுக்கு அளவே இல்லை என்று திருநாவுக்கரசு சுவாமிகள் அருளுகின்றார்கள்.

இத்திருக்கோயிலில் திருவிளக்குப்பணி ஆண்டுமுழுதும் சிறப்பாக நிகழ இவ்வறக்கட்டளையை நிறுவி. தங்களது ஜன்ம நக்ஷத்திர நன்னாளன்று (9—12—79) தருமையாதீனம் இருபத்தாறுவது குரு மகாசந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** ரூபாய் இருநூற்றுஐம்பத்தொன்று வழங்கித் தொடங்கி வைத்தார்கள். அன்று முதல் பக்தர்கள் பலர் தாமாகவே விரும்பி ஒவ்வொருவரும் ரூ. 251—00 அளித்து இவ்வறக்கட்டளையில் பங்கு கொள்கின்றனர்.

அறக்கட்டளை அமைப்பு

அன்பர்கள் தாங்கள் பிறந்தநாள், திருமணநாள், தங்கள் முன்னோர்களின் நினைவுநாள் போன்ற அவரவர்கள் விரும்பும் யாதேனும் ஒருநாளில் ஆண்டுக்கொருமுறை இத்திருக்கோயிலில் திருவிளக்கிட இவ்வறக்கட்டளையினை அமைத்துக்கொள்ளலாம். இதில் பங்கு கொண்டு நலம்பெற விரும்புவோர் ரூபாய் இருநூற்றைம்பத்தொன்று இத்தேவஸ்தானத்தில் நேரிலோ அல்லது காசோலைவாயிலாகவோ செலுத்தி இரசீது பெற்றுக்கொள்ளவேண்டும். இத்தொகையினை வைப்பு நிதியாகக்கொண்டு ஆண்டுதோறும் அதில்வரும் வட்டித் தொகையிலிருந்து, காணிக்கை செலுத்துவோர் குறிப்பிடும்நாளில் திருவிளக்கிட்டு, பெருமானுக்கு அருச்சனை செய்து நேரில் வருவோருக்கு நேரிலும், வர இயலாதோருக்குத் தபாலிலும் பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

வேண்டுகோள்

வேண்டிய வரங்களை வேண்டியபடியே அளிக்கும் மாயூரம் ஸ்ரீ வள்ளிதேவசேனை உடனாகிய ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் திருவிளக்கு அறக்கட்டளையில் அன்பர்கள் பங்குகொண்டு மெய்ந்நெறியாகிய ஞானமும் நிறைசெல்வமும் நீளாயுளும் பெற்று உய்வார்களாக.

கோயிலமைப்பு : நான்கு திருவீதிகளோடு பெரிய ஊராக விளங்கிய இவ்வூர் இன்று சிறிய கிராமமாக உள்ளது. கோயில் புதிய திருப்பணிகளோடு பொலிவுடன் உள்ளது. கிழக்கு நோக்கிய சந்நிதி. இரண்டு பிராகாரங்கள் உள்ளன. இருபுறமும் நந்திகள் அமைந்த நுழைவாயிலைக் கடந்து உள்ளே சென்றால் முதற்பிராகாரம். அம்பாள் கோயில் இங்குள்ளது. நந்தி பலிபீடங்களை வழிபட்டு வலமாக வந்து இரண்டாவதுவாயிலை அடையலாம். இரண்டாம் கட்டைக்கோபுரம் இத்தல ஐதிகச் சிற்பங்களோடு விளங்குகிறது.

கோபுரவாயிலைக் கடந்து உள்ளே சென்றால் முதற்பிராகாரம். அக்னிமூலையில் மடைப்பள்ளி உள்ளது. மேற்குப்பிராகாரத்தில் விநாயகர் சோமாஸ்கந்தர் முருகன் விசுவநாதர் விசாலாக்ஷி ஆதியாழ்மூரிநாதர் மகாலட்சுமி ஆகியோர் உள்ளனர். வடக்குப்பிராகாரத்தில் சண்டேசுரர் கோயில் உள்ளது. கர்ப்பக்கிருகக் கோஷ்டங்களில் தெற்கே தஷிணாமூர்த்தி வடக்கே பிரமன் துர்க்கை ஆகியோர் உள்ளனர். தலமரம் வாழை இங்குள்ளது. கிழக்குப் பிராகாரத்தில் சூரியன் பைரவர் ஆகியோர் உள்ளனர். ஸ்நபன மண்டபத்தை அடைவோம். அங்கேதென்புறத்தில் சோமாஸ்கந்தர் எழுந்தருளியுள்ளார். வடபுறத்தில் திருவுலாக்கொள்ளும் உற்சவமூர்த்திகள் எழுந்தருளியுள்ளனர். உற்சவமூர்த்திகளில் திருவுலாநாயகராக விளங்கும் யாழ்மூரிநாதர் திருவுருவம் தரிசிக்கத்தக்கது. நடராசப்பெருமான் எழுந்தருளிக்காட்சி தருகிறார். அவரையடுத்து சமயாசாரியர் நால்வர் விளங்குகின்றனர். கீழ்ப்புறம் பைரவர் விளங்குகிறார்.

சுவாமி சந்நிதியின் இருபுறமும் விநாயகரும் பாலசுப்பிரமணியரும் எழுந்தருளியுள்ளனர். துவாரபாலகர் விளங்குகின்றனர். பெருமான் யாழ்மூரிநாதர் என்ற திருப்பெயரோடு நம் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு மூலலிங்கமாய் விளங்குகின்றார். அவரைத் தரிசிக்கின்ற போது நம்உள்ளம் அவர்பால் ஈடுபடுவதை உணரலாம். திருஞானசம்பந்தர் அருளிய,

மாதர்ம டப்பிடியும் மடஅன்னமும் அன்னதோர்
நடைஉடை மலைமகள் துணையென மகிழ்வர்
பூதவி னப்படை நின் றிசைபாடவும் ஆடுவர்
அவர்படர் சடைந்நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசை பாடுவர் ஆழ்கடல் வெண்டிரை
இரைந் நுரை கரைபொருது விம்மிநின் றயலே
தாதவிழ் புன்னை தயங்கும் மலர்ச்சிறை வண்டறை
யெழில் குயில்பயில் தருமபுரம் பதியே.

என்ற திருப்பாடலை ஓதி வழிபடுவோம். அம்பாள் சந்நிதி வெளிப்பிராகாரத்தில் உள்ளது. அழகிய முன்மண்டபத்தோடு தெற்கு நோக்கித்

திகழும் அம்பிகைகோயிலை அடைவோம். தேனமிர்தவல்லி என்ற பெயரோடு அம்பிகை அருள்வழங்கும் கருணைக் குறிப்போடு விளங்குவதைத் தரிசித்து வழிபடுவோம்.

மூர்த்திகள் : இறைவன் திருப்பெயர் அருள்மிகு யாழ்மூரிநாதர். இறைவி திருப்பெயர் அருள்மிகு தேனமிர்தவல்லி. மதுரமின்னம்மை எனவும் வழங்கப் பெறுகிறார். உற்சவமூர்த்திகளில் ஒருபால் திருஞானசம்பந்தரும் ஒருபால் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் விளங்க நடுவில் கைகளில் யாழைத்தாங்கி விளங்கும் யாழ்மூரிநாதர் திருவுருவம் இத்தலத்துக்குத் தனிச்சிறப்புத்தரும் மூர்த்தியாக விளங்குகிறார்.

தீர்த்தம் : விஷ்ணுதீர்த்தம், பிரமதீர்த்தம் ஆகியன. இவை கோயிலின் வடபாலுள்ளன. தருமதீர்த்தம் கோயிலின் முன்புறம் உள்ளது. தலமரம் - வாழை.

புராண வரலாறுகள் : இத்தலத்து இறைவனைப் பிரமன்பூசித்துப் பேறுகள் பலவும் பெற்றுள்ளான். பிரமன் திருமால் ஆகியோர் நீராடி வழிபட்டதீர்த்தங்கள் பிரமதீர்த்தம், விஷ்ணுதீர்த்தம் என்ற பெயர்களோடு விளங்குகின்றன. தருமராசன் வழிபட்டு அருள்பெற்றதால் இத்தலம் தருமபுரம் என்ற பெயரோடு திகழ்கின்றது.

யாழ்மூரிப்பண் எழுந்தது : திருஞானசம்பந்தர் திருக்கோழம்பம் வைகல் மாடக்கோயில் முதலிய தலங்களைப்பணிந்து திருத்தருமபுரம் வந்தடைந்தார். தருமபுரம் திருநீலகண்டப் பெரும்பாணருடைய அன்னையார் பிறந்த ஊராதலின் அங்கு வாழும் அவரது சுற்றத்தார் திருஞானசம்பந்தரை எதிர்கொண்டு போற்றினர்கள். பாணரும் தாம் பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளும் தேவாரத் திருப்பதிகங்களை யாழிலிட்டு வாசிக்கும் பேறுபெற்றமையைத் தம் சுற்றத்தார்க்கு எடுத்துரைத்து மகிழ்ந்தார். அதனைக்கேட்ட உறவினர்கள் பாணரை நோக்கி 'நீவிர் ஞானசம்பந்தரின் திருப்பதிகங்களை யாழிலிட்டுத்தக்க முறையில் வாசிப்பதனால்தான் அவை யாண்டும் பரவுவவாயின' எனக்கூறினர். அதனைக் கேட்டுத் திடுக்குற்ற யாழ்ப்பாணர் ஞானசம்பந்தரைப் பணிந்து அவர் அருளும் திருப்பதிக இசை அளவிலடங்காத் தன்மையது என்பதை எல்லோருமறியச் செய்தருள வேண்டும் என வேண்டினர். அவரது வேண்டுகோளுக்கிணங்கிய ஞானசம்பந்தர் திருப்பதிகத்தின் இசை கண்டத்திலும் கருவியிலும் அடங்காத வண்ணம் 'மாதர் மடப்பிடி' என்ற திருப்பதிகத்தைப்பாடி யாழ்மூரிநாதரைப் போற்றினர். திருநீலகண்ட யாழ்ப்பாணர் வழக்கம்போல் தம் கையிலுள்ள யாழ்க்கருவியால் அத்திருப்பதிகத்தினை வாசிக்கத்தொடங்கினர். அத்திருப்பதிகஇசை யாழில் அடங்கவில்லை.

அதனை உணர்ந்த பெரும்பாணர் நடுக்கமுற்றுப் பிள்ளையார் திருவடிகளைவணங்கித்தாங்கள் அருளும் திருப்பதிக இசையை யாழில் ஏற்பன் என்று கூறக் காரணமாக இருந்தது இந்த யாழன்றோ? எனக்கருதி வருந்தித் தம்கையிலிருந்த யாழை உடைத்தற்கு ஓங்கினர். ஞானசம்பந்தர் பாணரைத் தடுத்து நிறுத்தினர். பாணரின் யாழைத் தம் கையில் வாங்கிக்கொண்டு ஐயரே நீர் யாழைமுரிக்கப்புகுந்தது ஏன்? இறைவனது திருவருட் பெருமையெல்லாம் இக்கருவியில் அடங்குதல் கூடுமோ? சிந்தையால் அளவுபடாத பதிக இசை செயலளவிலும் எய்தாததுதான். இருப்பினும் நீவிர் இந்த யாழைக்கொண்டே இறைவர் திருப்பதிக இசையை இயன்ற அளவு வாசிப்பீராக என்று கூறி யாழைப் பாணர் கையில் கொடுத்தருளினர். பாணரும் அதனைப் பெற்றுக்கொண்டு முன்போலவே இசைத்தொண்டை மேற்கொண்டார். ஞானசம்பந்தர் இத்தலத்தில் சில நாள் தங்கிப் பிற தலங்களை வணங்கப் புறப்பட்டுத் திருநள்ளாற்றை அடைந்தார்.

முரி என்பது ஒருவகை இசைப்பாடல். இதனை யாழில் அமைத்துப்பாடுவது அருமையுடையது. அத்தகைய இசையமைப்புடையதாதலின் இப்பதிகம் யாழ்முரி எனப்பெற்றது என்றும், பாணர் யாழை முரிக்குமாறு அமைந்த இத்தலத் திருப்பதிகம் யாழ்முரிப் பதிகம் என்னும் சிறப்புப்பெயர் பெற்றது என்றும் கூறுவர். இவ்வரலாற்றைப் பெரியபுராணத்துள் விரிவாகக்காணலாம். நம்பியாண்டார் நம்பிகளும்,

“ ஏழிசை யாழை எண்டிசை யறியத்
துண்டப் படுத்த தண்டமிழ் விரகன் ”

என்றும்,

“ பாமாலை யாழ்முரியப் பாணழியப் பண்டருள்செய்
மாமான சுந்தரன்வண் சம்பந்த மாமுனி ”

என்றும் போற்றியுள்ளார்.

திருநள்ளாறு

இத்தலம், சைவசமயத்தின் பெருமையைச் சமணர்கள் முன்னிலையில் அனல்மூலம் ஞானசம்பந்தர் நிலைநாட்டுதற்கு உதவிய பச்சைத்திருப்பதிகத்தைப் பெற்றபெருஞ்சிறப்புடையது. நிடதநாட்டு மன்னன் நளனைப் பற்றியிருந்த சனிபகவான் எழுந்தருளி விளங்கும் பெருமையையும், சப்தவிடங்கத் தலங்களில் நகவிடங்கத் தியாகேசர் எழுந்தருளியுள்ள சிறப்பையும்பெற்றது. தருமையாதீன அருளாட்சித் தொடர்பு உடையது.

வழி : பேரளம் — காரைக்கால் புகைவண்டி மார்க்கத்தில் திருநள்ளாறு ஒரு புகைவண்டி நிலயமாக உள்ளது. இரயில்நிலயத்திலிருந்து தெற்குகே அரை கி. மீட்டர் தூரம் சென்றால் இக்கோயிலை அடையலாம். பேரளம், காரைக்கால், அம்பகரத்தூர், கும்பகோணம், மாயூரம், நாகப்பட்டினம் முதலிய பல இடங்களிலிருந்து இத்தலத்திற்குச் செல்ல பஸ் வசதிகள் நிரம்ப உள்ளன.

தலப்பெருமை : மூர்த்தி, தலம், தீர்த்தம், வரலாற்றுச் சிறப்பு ஆகிய அனைத்தானும் பெருமைபெற்றது இத்திருத்தலம். இங்குள்ள அருள்மிகு சொர்ணகணபதியும் தர்ப்பாரண்யேசுரராகிய நள்ளாற்றீசரும், போகமார்த்தபூண்முலையம்மையும், நகவிடங்கத் தியாகரும், சனிபகவானும் தனிச் சிறப்புடைய மூர்த்திகளாவர். 'நள்ளாறா என நம்வினை நாசமே' என்று அப்பர்பெருமான் கூறுகிறார். இங்குள்ள நளதீர்த்தம் நளன் நீராடி கலிநீங்கப்பெற்ற சிறப்புடையது. இத்தலம் ஒருநாள் தங்கி வழிபட்டவர்க்கே எல்லாப் பயன்களையும் அளிக்க வல்லது. ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் பாடியருளிய தேவாரத்திருப்பதிகங்களையும் தேவாரத் தனிப்பாடல்களையும் பெற்றுள்ள பெருமைக்குரியது.

திருஞானசம்பந்தர் மதுரையில் சமணர்களோடு வாதிட்டபோது, இத்தலத் தேவாரத் திருப்பாடலாகிய "போகமார்த்தபூண்முலையாள்" எனத் தொடங்கும் திருப்பாடலை அனலில் இட்டு, அது பச்சைத் திருப்பதிகப் பாடலாய் விளங்குவதை உலகவர்க்கு உணர்த்தி, சைவ சமயத்தின் சிறப்பை நிலைபெறச் செய்தார் என்பது பெரியபுராணத்தில் கூறப்படும் வரலாறு.

கோயிலமைப்பு : நான்கு வீதிகளின் நடுவே கிழக்குநோக்கி அழகுற அமைந்துள்ளது கோயில். கோயிலின் திருவாயிலில் பெரிய திருமுற்றம் உள்ளது இங்கு வடபுறம் அலுவலகமும் வாகன மண்டபமும் தென்புறம் இடையனார் கோயிலும் உள்ளன. இக்கோயிலில் இடையன், அவன் மனைவி, கணக்கன் உருவங்கள் உள்ளன. முற்ற வெளியை அடுத்துள்ளது இராஜகோபுரம். ஐந்துநிலைகளோடு அழகுற விளங்கும் இக்கோபுர வாயிலைக்கடந்து உள்ளேசென்றால் இரண்டாவது திருச்சுற்றை அடையலாம். இத்திருச்சுற்றின் சுவரில் நளன் சரித்திரமும் இத்தலத்தின் தொடர்புடைய பிற வரலாற்று ஓவியங்களும் உள்ளன. வடமேற்கு மூலையில் தியாகேசப்பெருமான் வசந்த விழாக்கொள்ளும் மண்டபம் உள்ளது. வடகீழ்க்கோடியில் அருள்மிகு காளத்திநாதர் திருக்கோயிலும் அதன்பின்புறம் யாகசாலையும் உள்ளன. வலமாக வந்து இரண்டாம் கோபுரவாயிலை அடையும்போது வாயிலின் தென்பால் உள்ள கற்பகவிநாயகரை வழிபடலாம். கோபுர வாயிலின் வடபால் சனிபகவான் எழுந்தருளி விளங்கும் சந்நிதி

உள்ளது. அதையடுத்து அருள்மிகு போகமார்த்த பூண்முலையம்மை கோயில் உள்ளது. கோபுரவாயிலில் அமைந்துள்ள முன்மண்டபம் கருங்கற்பணியோடு கவினுறத் திகழ்கிறது.

கோபுரவாயிலைக் கடந்து உள்ளே சென்றால் முதற்பிராகாரத்தை அடையலாம். இத்திருச்சுற்றை வலம் வரும்போது தியாகேசரை நோக்கி வழிபடும் நிலையில் உள்ள சுந்தரரை முதலில் தரிசிக்கலாம். தெற்கே உள்ள திருமாளிகைப் பத்திமண்டபத்தில் சமயாசாரியர் நால்வர் விநாயகர் தர்ப்பாரண்யர் அறுபத்துமூவர் ஆகியோரும், தனி மண்டபத்தில் கலிநீங்கிய நளனும் உள்ளனர். அறுபத்துமூவர்க்கு எதிரே தியாகேசரின் தென்னந்திருவாயிலும் அதையடுத்து தஷிணா மூர்த்தி சந்நிதியும் உள்ளன.

மேற்குத் திருமாளிகைப்பத்தி மண்டபத்தில் முதலில் சொர்ண கணபதியும், சோமாஸ்கந்தர், சப்தவிடங்கத் தலலிங்கமூர்த்திகள் திருமால் முருகன் திருமகள் ஆகியோரும் உள்ளனர். மேற்கே உள்ள கர்ப்பக்கிருகக்கோஷ்டத்தில் இலிங்கோற்பவர் எழுந்தருளியுள்ளார்.

வடக்குப்பிராகாரத்தில் தியாகேசர் எழுந்தருளும் எண்கால் மண்டபமும், கிழக்குக்கோடியில் பைரவரும். அவரையடுத்துத் தனி மண்டபத்தில் நடராசப்பெருமானும் எழுந்தருளி உள்ளனர். கிழக்கே சூரியபகவான் எழுந்தருளியுள்ளார்.

சுவாமி சந்நிதியில் கொடிமரம் நந்தி பலிபீடங்களைத் தரிசித்துப் பக்கவாயில்வழியாகப் பெருமான் சந்நிதியை அடைவோம். படியேறிய உடன் முன்மண்டபத்தை அடையலாம். இங்குள்ள நந்தி தேவர் பெருஞ்சிறப்புடையவர். மழைவளம் தருபவர். அவரைத் தரிசித்துக் கணக்கனுக்காக விலகிய பலிபீடத்தைக் கடந்து மகா மண்டபத்தை அடையலாம். இங்குள்ள துவாரபாலகர் திருவுருவம் பல்லவர்காலக் கலையழகைக் காட்டுவதாக உள்ளது. சுவாமி சந்நிதியில் நின்று ஞானசம்பந்தர் அருளிய,

போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள் ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண ஆடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே.

என்ற திருப்பாடலை ஓதி வழிபட்டு அங்குள்ள பஞ்சமூர்த்திகளையும் தெற்குவாயில் வழியாகத் தியாகேசர் சந்நிதியை அடைந்து தியாகேசரையும் வழிபடுவோம். அங்குள்ள விநாயகர், அர்த்தநாரீசுவரர் மரகதலிங்கம் ஆகியவற்றை வழிபட்டுச் சனிபகவான் சந்நிதியை அடைந்து,

வேயுறு தோளிபங்கன் விடமுண்டகண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்துஎன்
உளமேபுகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம்பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

என்ற கோளறு திருப்பதிகப் பாடலை ஓதி வழிபட்டு அம்பாள்சந்நிதியை அடைவோம். அம்மை அருள்மிகு போகமார்த்த பூண்முலையாள் என்ற திருப்பெயரோடும் அருள்சுரக்கும் திருமுகமண்டலத்தோடும் காட்சிதருகிருள். வழிபட்டு அருள்நலம்பெறுவோம்.

மூர்த்திகள் : இத்தல விநாயகர் சொர்ணவிநாயகர். இறைவன் திருப்பெயர் அருள்மிகு தர்ப்பாரண்யேசுரர். பிரமன் கூர்ச்சத்தில் ஆவாகனம் செய்து வழிபட்டதாகக் கூறுவர். தமிழில் நள்ளாறர் எனவும் நள்ளாறுடையார் எனவும் வழங்கப்பெறுகிருர். இறைவி திருப்பெயர் அருள்மிகு போகமார்த்த பூண்முலையாள்; வடமொழியில் பிராணேஸ்வரி என வழங்கப்பெறுகிருர். சக்திபீடங்கள் ஐம்பத்தொன்றில் இது பிராணேஸ்வரி பீடம். தியாகேசர் நகவிடங்கத் தியாகர் எனப்பெறுகிருர். நடனம் உன்மத்த நடனம். இத்தல முருகன், கையில் பழம் ஏந்தி விளங்குகிருர். மயில் வடக்குநோக்கி உள்ளது. தலமரம் தருப்பை வடக்குப் பிராகாரத்திலுள்ளது. தீர்த்தம் எதிரே பிரமதீர்த்தமும் அம்பாள் சந்நிதிக்கு எதிரே சரஸ்வதி தீர்த்தமும் உள்ளன. மற்றும் ஆறுதீர்த்தங்கள் கோயிலைச் சுற்றி உள்ளன.

நளதீர்த்தம் இத்தலத்திற்குத் தனிச் சிறப்பினைத்தரும் தீர்த்தம் இது. நாடோறும் யாத்திரீகர்கள் இத்தீர்த்தத்தில் எண்ணெய்தேய்த்து நீராடி இறைவன் இறைவி சனிபகவான் ஆகியோரை வழிபட்டுத் திலதீபமிட்டு அருள்பெறுகின்றனர். இந்நள தீர்த்தம் நளனுல் அமைக்கப் பெற்றது. இதில் நவக்கிர கங்களுக்கும் தனித்தனிக் கிணறுகள் உள்ளன. இதில் நீராடி இறைவனை வழிபடுவோர் ஒன்பது கோள்களினுல் ஏற்படும்இடையூறுகளிலிருந்து நீங்கி நலம் பெறுவர்.

வழிபட்டோர் : திருமால், பிரமன் இந்திரன் அஷ்டதிக்குப் பாலகர், முதலிய தேவர்களும் அகத்தியர், புலத்தியர் முதலிய சப்தரிஷிகளும், அருச்சுனன், நளன், கலிங்கன், வருஷராசன் முதலிய அரசர்களும் பூசித்து அருள்பெற்றுள்ளனர்.

சனிபகவான் : இத்தலத்தில் உள்ள மூர்த்திகளில் சிறந்தவர் இவர். இரண்டாங்கோபுர நுழைவாயிலின் வடபால் இவர்எழுந்தருளி

யுள்ளார். சனிபகவான் நவக்கிரகங்களில் ஒருவர். ஒவ்வொரு ஜாத கருக்கும் ஆயுள்காரனுக விளங்குபவர். நவக்கிரகங்களில் இவரால் வரும் நன்மை தீமைகள் அளவிலடங்கா ஆதலின் இவரை எல்லோ ரும் பயபக்தியோடுவழிபடுவர். சனியைப்போலக் கொடுப்பவருமில்லை; சனியைப்போலக் கெடுப்பவருமில்லை என்பது பழமொழி.

சூரியனுக்குச் சஞ்ஞிகை என்ற மனைவியிருந்தாள். அவள் துவட்டா என்பவரின் புதல்வி. அவள் சூரியனேடுகூடி வைவஸ்வத மனுவையும், யமனையும். யமுனை என்னும் பெண்ணையும் பெற்ருள். பின்பு சூரியனுடைய வெப்பத்தைத் தாங்க மாட்டாமையால் தன் நிழலையே சாயாதேவி எனப் படைத்து நீ என் கணவனைவிட்டு நீங்காமல் இருப்பாயாக எனக் கூறித் தன் தந்தைவீடு சென்ருள். தந்தையிடம் சொன்னுள். தந்தை கடிந்துகொண்டார். பின் தன் கணவன்வீடு திரும்ப அஞ்சி, வடதுருவம்சென்று குதிரைவடிவோடு சூரியனை நோக்கித் தவம் செய்தாள்.

சாயாதேவி சூரியனேடுகூடி வாழ்ந்து சாவர்ணி என்ற மனுவை யும், சனிபகவானையும், பத்திரை என்ற பெண்ணையும் பெற்ருள். தான் பிள்ளைகளைப் பெற்றபின் மூத்தாள் பிள்ளையைத் தாறுமாருக நடத் தினுள். யமன் அவளைக் காலால் உதைக்க வந்தான். யமன்கால் மூறியக்கடவது எனச் சாபங்கொடுத்தாள் சாயாதேவி. யமன் சூரிய னிடம் கூறினன். சூரியன், சாபப்படி சாவில் புண்ணுண்டானலும் தன் வரத்தின்படி குணமடைவாய் என்று ஆறுதல் கூறிச் சாயா தேவியிடம் சென்ருன்.

பெற்றதாய் பிள்ளைகளைச் சமமாகக் கருதாமல் வேற்றுமை பாராட் டும் காரணத்தைச் சிந்தித்து, சாயையாக வந்திருப்பவள் யார் என்பதை ஞானத்தால் உணர்ந்து அவளை வினவினுன். சாயாதேவி உண்மையை உரைத்தாள். சாயையை மன்னித்துத் தன் மனைவி யைத் தேடி ஆண் குதிரைவடிவோடு வடதுருவம் சென்ருன். தன் மனைவியின் தவத்தைக்கண்டு வியந்தான். தன் உண்மை வடிவைக் காட்டி அவளையும் உடனழைத்துக்கொண்டு வந்து இரு மனைவி மாரோடு இல்லறம் நடத்தினுன். மனுவை மன்னனுகவும், யமனைக் காலனுகவும். யமுனையை நதியாகவும், சனியைக் கோள்களுள் ஒன்ரு கவும் இருக்குமாறு செய்தான். சனிபகவான் காசிக்குச்சென்று விசுவ நாதரின் அருள்பெற்று, தன் பதவிக்குவேண்டிய வலிமையைப் பெற்ருன் என்பது வரலாறு.

சனிபகவானுக்கு மந்தன் சனைச்சரன் முதலிய திருப்பெயர்கள் உள்ளன. சனைச்சரன் என்னும் பெயரே சனிஎன வழங்கப்படுகிறது. சனி 12 ராசிகளைச் சுற்றிவர 29½ யாண்டுகள்செல்வதால் மந்தன்

என்னும் பெயரைப்பெற்ருர். யமன் தன் இரண்டாந்தாயின்மேல் கொண்ட சீற்றத்தால் சனியை அடித்தான் ; அதனுல் சனியின்கால் நொண்டியாயிற்று என்பது வரலாறு. தக்ஷயாகத்தில் சனி ஒரு கண்ணை இழந்தார்.

சனிபகவான் கருநிறமுள்ள கழுகுவாகனமுள்ளவர்; நான்கு கைகளை உடையவர்; வலப்பக்கக் கைகளில் வர தான முத்திரையையும் பாம்பையும் கொண்டவர்; இடப்புறக்கைகளில் வில்லும் சூலமும் உடையவர். சில ஆகமங்களில் இவருக்குக் காகவாகனமும் சொல்லப் பட்டுள்ளது. இவர்மனைவிபெயர் ஜ்யேஷ்டா மற்றும் நீலா, மந்தா என்பவரும் மனைவியராவர். இவர் மகர கும்பராசிகளுக்கு அதிபதி. இவருக்குப் பிரஜாபதி அதிதேவதை. யமன் பிரத்யதிதேவதை. இவருக்குத் தானியம் எள். சமித்து வன்னி. மலர் கருநீலம். சுவை கசப்பு புதன் குரு சுக்கிரன் நண்பர்கள். சூரியன் சந்திரன் செவ்வாய் பகைவர். இவர் குமாரன் குளிகன். இருப்புச்சட்டியில் நல்லெண்ணெயைவிட்டு அதில் சனி இருப்பதாகப்பாவித்துத் தானம்செய்வது, சனியினுல் உண்டான சகல பீடைகளையும் போக்கும். இவரது உருவத்தை இரும்பால் செய்விக்கவேண்டும். இவர் இத்தலத்தில் அனுக்கிரகமூர்த்தியாக எழுந்தருளியுள்ளார். இத்தலத்தில் தன்னை வழிபடும் அன்பர்கட்கு எல்லாவிதமான தோஷங்களையும் போக்குபவராகவும். நீண்ட ஆயுளைத்தருபவராகவும் விளங்குகிருர். இவரது தியான சுலோகம் :-

காகஸ்தம் கஞ்சளாபம் கடிகர சஹிதம் காகவர்ணம் கராளம்
கர்ணுப்யாம் குண்டலாட்யம் கரிநிப வபுஷம்
குரூர தமிஷ்டரம் குருபம் 1 கண்டே சம்விதசூத்ரம்
கநகமணி மயைர் பூஷணைர் பூஷிதாங்கம்
வந்தே மார்த்தாண்ட சூனும் விவிதபயகரம்
வாஞ்சிதார்த்தப் பிரதம் தம்.

இவருக்குத் தனியே அஷ்டோத்திரம், சகஸ்ரநாமம் அர்ச்சனைகள் உண்டு.

புராணவரலாறு

இடையனுக்கு அருள் செய்தது : இடையன் ஒருவன் அரசன் ஆணைப்படி திருக்கோயிலுக்குப் பால் அளந்துவந்தான். கணக்கன் அப்பாலைத் தன்வீட்டுக்கு அனுப்பிப் பொய்க்கணக்கு எழுதியும் இடையனை அச்சுறுத்தியும் வந்தான். இச்செய்தி மன்னனுக்குத் தெரிந்தது. பெருமான் இடையனைக் காப்பாற்றவும் கணக்கனுக்குத் தண்டனைதரவும் திருவுளங்கொண்டு சூலத்தை ஏவினுர். சூலத்திற்கு வழிவிடப் பலிபீடம் விலகியது. சூலம் கணக்கன் தலையைக்கொய்தது. இறைவன் இடையனுக்குக் காட்சி வழங்கி அருள்புரிந்தார்.

பிரமன் பூசித்தது : தான்படைத்த உலகங்களைக் காணப் பிரம தேவர் புறப்பட்டுத் தர்ப்பாரண்யத்திற்குவந்தார். இங்குத் தவம் செய்யவேண்டுமென்ற எண்ணம் அவருக்கு உண்டாயிற்று. தர்ப் பாரண்யேசுரரை ஆயிரம் பெயர் சொல்லி அர்ச்சித்தார். வேதாகமப் பொருள்களையும் தன் படைப்புத்தொழிலின் சிறப்பினையும் பெற்றார். பெருமான் உறையும் திருக்கோவிலைப் பெருமைபெறக் கட்டினார். தன்பெயராலும் கலைவாணியின் பெயராலும் தீர்த்தங்கள் உண்டாக்கி வழிபட்டார்.

கலிங்கமன்னன் அருள்பெற்றது : பார்க்கவமுனிவர் சாபத்தால் காட்டுயானையாகத் திரிந்த கலிங்கமன்னன் நாரதர்கட்டளைப்படி இத்தலத்தை அடைந்து இறைவனை வழிபட்டு மீண்டும் மன்னனாக மாறித் தன் நாட்டை அரசுபுரிந்தான்.

நளன் வரலாறு : நிடததாட்டுமன்னன் நளன். அவன் விதர்ப்ப நாட்டுமன்னன் வீரசேனன் மகள் தமயந்தியைச் சுயம்வரம் மூலமாக மணம்புரிந்தான். கலிபுருடனாகிய சனி, தமயந்தி தேவர்களைப் புறக் கணித்து நளனைமணந்த செய்திகேட்டு நளன்மேல் கோபங்கொண் டான். நளனிடம் ஏதும் குறைகாணாது 12 ஆண்டுகள் காத்திருந்து காலில் நீர் பட்டும் படாமலும் கழுவிச்சென்ற குற்றம்காரணமாக அவனைப்பற்றினான். புட்கரன் என்ற மன்னனைக்கொண்டு நளனோடு சூதாடச்செய்து அவனது செல்வத்தைக் கெடுத்தான். தன்செல்வங் களை இழந்த நளன் தன் மக்களை மாமன் வீட்டுக்கு அனுப்பி ஆடை அணிகலன்களையும் இழந்து, மனைவியுடன் காட்டுக்குச்சென்றான்.

கானகத்தில் காரிருளில் தன் காதலி தமயந்தியையும் பிரிந்து, கார்க்கோடகன் என்னும் பாம்பினால் தீண்டப்பட்டுக் கருநிறம் எய்தி, அயோத்தி அரசன் இருதுபன்னனை அடைந்து, அவனது தேர்ச்சார தியாய் வாழ்ந்துவந்தான். தமயந்தி காட்டில் மிகவும் துன்புற்றுப் பின் தன் தந்தை வீட்டுக்குச் சென்றாள். இரண்டாவது சுயம்வரத்துக்குத் தானே ஏற்பாடுசெய்தாள். இருதுபன்னன் அச்சுயம்வரத்துக்குச் சென்றான். விதர்ப்பநாட்டு மன்னனைக்கண்டு உரையாடி மகிழ்ந் திருந்தான். தேர்ச்சாரதியாக வந்திருந்த நளன் தன் அரசனுக்கு உணவு சமைக்கத் தொடங்கினான். தமயந்தி தன் மக்களை அடுக் களைக்கு அனுப்பிவந்திருப்பவன் தன் கணவனே என்பதைஅறிந்தாள். வீமன் சாரதியை அழைத்துவரச்செய்து, உண்மை வடிவத்தைக் காட்டச்செய்து, வாகுகனாய் வந்திருப்பது நளனே என்பதை அறிந்தான். மனைவியையும் மக்களையும் நளன் அழைத்துக்கொண்டு மீண்டும் தன்னாட்டை அடைந்து அரசாளத் தொடங்கினான். அவனைப்பற்றியிருந்த கலிவேகம் இன்னமும் இருந்தது.

நாரதர் உபதேசப்படி நளன் தீர்த்தயாத்திரை மேற்கொண்டான். திருமுதுகுன்றத்தில் பாரத்துவாசமுனிவர் திருநள்ளாறு சென்று வழி படுமாறு பணித்தார். அங்ஙனம் திருநள்ளாறு அடைந்த நளன் பிரம தீர்த்தத்தில் நீராடி நள்ளாற்றிறைவனை வழிபடும் வேட்கையோடு இத்தலத் திருக்கோயிலுக்குள் நுழைந்தான். கோபுரவாயிலில் தான் அடியெடுத்து வைக்க முற்பட்டவுடன் அவனைப்பற்றியிருந்த சனி பகவான் அஞ்சினுர். சிவபெருமானின் சினத்தால் காலனுக்கு நேர்ந்தது நமக்கும் நேர்ந்தால் என் செய்வது என்று அஞ்சி நளனைப் பிரிந்து கோபுரவாயிலில் தங்கினுர். நளன் இராகு கேதுக்களால் விழுங்கப்பெற்றுப் பின் உமிழப்பட்ட சந்திரன் ஒளிவிடுவதுபோலச் சுடர்மிகு மேனியோடு பெருமானை வணங்கிப் பலவரங்களையும்பெற்று மகிழ்ந்தான். தன் பெயரால் தீர்த்தமொன்று உண்டாக்கி அதில் நவக்கிரக கூபங்களை அமைத்து அதில் நீராடுவார்க்கு நவக்கிரகங் களால் ஏற்படும் துன்பங்களை நீக்கியளுமாறு இறைவனை வேண்டி வரம்பெற்ருன்.

பசுக்கொலைப்பழி போக்கியது : அந்தணன் ஒருவன் பசுவைக் கொன்ற பழியால் பீடிக்கப்பட்டுப் புலையனுய்த்திரிந்தான். உரோமச முனிவரின் உபதேசப்படி இத்தலத்தை அடைந்து அன்னதீர்த்தத் தில் நீராடி அருள்பெற்ருன்

உருசிவரசன், அக்கினிவண்ணன் அருள்பெற்றது: அவந்தி நாட்டுமன்னன் உருசி என்பவனும் காம்பீலி நகரத்து வணிகனுகிய அக்னிவண்ணனும் இத்தலத்தின் பெருமைகளைக் கேள்வியுற்று இங்கு வந்து இறைவனை வழிபட்டு அருள்பெற்றுள்ளனர்.

சப்தவிடங்கத் தலங்கள் : திருமால் மகப்பேறு வேண்டி வழிபட்ட மூர்த்தி சோமாஸ்கந்த வடிவமாகிய தியாகேசர். அப் பெருமான் மன்மதனைத் திருமால்மகனுக அருளினுர். அவர் இந்திர னுக்கு அம்மூர்த்தியைக் கொடுத்தார். இந்திரன் அவரை வழிபட்டுச் சயந்தனைப் பெற்ருன். அசுரன் ஒருவனேடு சண்டையிட இந்திரன் தமிழ்நாட்டிலிருந்து முசுகுந்த சோழ மன்னனைத் துணைக்கு அழைத் துப் போரில்வெற்றியும் பெற்ருன். வெற்றிபெற்ற மகிழ்ச்சியில் இந்திரன் முசுகுந்தனுக்குப் பரிசுப் பொருள்கள் கொடுத்தனுப்ப விரும்பித் தாங்கள் பெறவிரும்புவது யாது என்ருன். முசுகுந்தன் இந்திரன் வழிபடும் தியாகேசரைக் கேட்டான். இந்திரன் மயனை அழைத்து ஏழு தியாகராசர் திருவுருவங்களைச் செய்து இவற்றில் நீ விரும் புவதொன்றை எடுத்துச்செல்க என்ருன். சோழன் இந்திரன் வழிபட்ட உண்மைத்தியாகராசரைக்கண்டு அம்மூர்த்தியைத்தருமாறு கேட்டுக்கொண்டான். இந்திரன் ஏழு தியாகராசர் திருவுருவங்களை யுமே எடுத்துச்செல்லுமாறு கூறினுன். முசுகுந்தன் ஏழு தியாகராசர்

திருவுருவங்களையும் தமிழ்நாட்டுக்குக் கொண்டுவந்து திருவாரூரைச் சுற்றிலும் ஆறுதலங்களைத் தேர்ந்து இந்திரன் வழிபட்ட மூல மூர்த்தியைத் திருவாரூரிலும் ஏனையவற்றை ஆறு தலங்களிலும் தாபித்து வழிபட்டான். இத்தலங்கள் சப்தவிடங்கத்தலங்கள் எனப்படும். அவற்றுள் இத்தலமும் ஒன்று. இங்குள்ள தியாகர் நகவிடங்கத் தியாகர் எனப்படுவார். நடனம் உன்மத்தநடனம். இத்தலங்களைக் குறிக்கும் வெண்பா :-

" சீரார் திருவாரூர், தென்னுகை, நள்ளாறு,
காரார் மறைக்காடு, காருயில், — பேரான
ஒத்த திருவாய்மூர், உவந்ததிருக் கோளிலி
சத்த விடங்கத் தலம். "

பச்சைத் திருப்பதிகம் : திருஞானசம்பந்தர் மங்கையர்க்கரசியார் வேண்டுகோட்படி தென்பாண்டி நாட்டிற்கு எழுந்தருளி மதுரையில் நின்றசீர்நெடுமாறபாண்டியனது முன்னிலையில் சைவசமயத்தின் பெருமையை நிலைநாட்ட முற்பட்டபோது சமணர்களோடு வாதிட நேர்ந்தது. ஞானசம்பந்தர் பாண்டிய மன்னனுக்கு ஏற்பட்ட வெப்பு நோயை அகற்றி அனல் வாதம் புனல் வாதங்களினால் தம் சமயச் சிறப்பை மன்னனுக்குணர்த்தினர். அனல் வாதத்தில் சமணர்கள் ஞானசம்பந்தரைநோக்கி அவரவரும் தங்கள் மந்திரங்களை எழுதித் தீயில் இடுவது என்றும், எவர்மந்திரம் எழுதிய ஏடு தீயில் வேகா திருக்கிறதோ அவர்மந்திரமும் அம்மந்திரப்பொருளாயுள்ள கடவுளும் அவரை வழிபடும் சமயமுமே உயர்ந்தது என்று ஒத்துக்கொள்வது என்றும் முடிவுசெய்தனர். தீயை வளர்த்துச் சமணர்கள் தங்கள் மந்திரங்களை எழுதிய ஏடுகளைத் தீயிலிட்டனர். அது உடனே தீப்பற்றியெரிந்து கருகிற்று. திருஞானசம்பந்தர் தாம் அருளிய திருப்பதிக ஏட்டைக் கொணரச்செய்து அதைத் தம் திருக்கரங்களால் பிரித்தபோது இத்தலத் தேவாரத் திருப்பாடலாகிய 'போகமார்த்த பூண்முலையாள்' எனத் தொடங்கும் திருப்பாடல் கிடைத்தது. ஞானசம்பந்தர் அதனை உருவித் திருவருளை நினைந்து தீயில் இட்டார். அது தீயிடைக்கருகாததோடு முன்னையினும் பசுமையாய்ப் பச்சென்று விளங்கிற்று. அனைவரும் வியந்து சைவ சமயமே மெய்ச்சமயம் என்பதையும், சிவபெருமானே முழுமுதற் பொருளாவார் என்பதையும் உணர்ந்தனர்.

ஸ்ரீ சனிபகவான் தோத்திரம்

பெருவாச நளனெடுவந் தவன்தீர்த்த மாடுதலாற் பெற்ற பேற்றால்
ஒருவாவந் தெம்பெருமா னருள்பெற்று மிகவுமனம் உவகை பூப்பக்
கருவாசல் புக்கார்போல் புகுந்தொளிரு நள்ளாற்றுக் கனக வச்ரத்
திருவாச விடனின்ற மந்தனிரு செந்தளிர்த்தாள் சிந்தை செய்வாம்.

— தலபுராணம்.

கட்டுரை எண். 3.

அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M A., B. Lit.,
D. P. P. A., D. U. N. I. U.

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே.

அ. உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம்.

(1) " தாயிற் சிறந்த தெய்வம் இல்லை
'காயத்திரி'யை விட உயர்ந்த மந்திரம் இல்லை"

என்பது சான்றோர் வாக்கு. அனைவரும் தினசரி கண்ணால் காணும் சூரியனையே அம்மந்திரம் போற்றுகிறது. காயத்திரி மகாமந்திரத்தால் துதிக்கப்படும் சூரியன், அன்னை சூட்டிக்கொள்ளும் உச்சித்திலகமாக அமைகிறான். அதாவது அவள் அணியும் உச்சித்திலகம் சூரியனை விடப் பிரகாசமாக இருந்து உலகுக்கு ஒளியூட்டுகிறது. திருமணமான சுமங்கலிப் பெண்கள் நெற்றியில் திலகமிட்டு, பின்னர் தலையில் 'வகிடு' தொடங்கும் பகுதியில் திலகமொன்று அணிகின்றனர். அதுவே உச்சித்திலகம் எனப்படும்.

(2) "தனோது க்ஷேமம்........." என்று தொடங்கும் சௌந்தரியலஹரி சுலோகத்தில் அம்பிகையின் 'சீமந்த ஸரணி' என்னும் தலைவகிடு வருணிக்கப்படுகிறது. கேசக் கற்றையினை இரு கூருக்கிப் பிரித்து இடையில் எடுத்திருக்கும் வகிடானது அம்பிகையின் 'அழகு' என்னும் வெள்ளம் பாய்ந்துவர அமைக்கப்பட்ட வாய்க்கால்போன்று இருக்கிறது. அந்த வகிட்டின் தொடக்கத்தில் அம்பிகை உச்சித் திலகம் சூட்டியிருக்கிறாள். இரு பக்கங்களிலும் கேசக்கற்றை இருள் போல் சூழ்ந்திருக்கின்றது. இடையில் பாலசூரியனைப் போன்று உச்சித்திலகம் விளங்குகிறது. உதிக்கின்ற செங்கதிரோனைப்பிடித்து, தனது கேச பாரங்கள் என்னும் இருட்டறையில் அடைத்து வைத் திருப்பதுபோன்று தோன்றுகிறது என்று ஆதிசங்கரர் வருணிக்கிறார். அந்த சீமந்த ஸரணியும், உச்சித்திலகமும் க்ஷேமத்தைக்

கொடுக்கட்டும் என்று வேண்டுகிறார். அவ்வாறு நமக்கு க்ஷேமம் ஏற்படும்பொருட்டு அபிராமிபட்டரும் முதலில் உச்சித்திலகத்தைக் குறிப்பிடுகிறார்.

(3) அகர. உகர, மகரங்களின் சமஷ்டியாகிய பிரணவத்தில் 'உகரம்' அம்பிகைக்கு உரிய எழுத்து. அவ்வெழுத்தைக் கொண்டு நூலைத்தொடங்கி, பிரணவப்பொருளாகிய அம்பிகையைத்துதிக்கிறார்.

(4) இவ்வந்தாதியினை 'உதிக்கின்ற' என்றுதொடங்கி 100-வது பாட்டில், 'உதிக்கின்றவே' என்று பூர்த்தி செய்கிறார். தேவியை வழிபடும் அன்பரின் வாழ்வில் தாழ்வே இல்லை. 'அஸ்தமனம்' என்னும் சூரியன் மறையும் வேளையே கிடையாது. எப்போதும் உதயமே என்பதைக் காட்டுகிறது இவ்வமைப்பு.

(5) சூரியனைக் குறித்தான 'ஆதித்யஹ்ருதயம்' என்ற தோத்திரத்தை உபதேசம் பெற்று வெல்லமுடியாத இராவணனை இராமர் வென்றார். அந்த ஆதித்யனே அன்னையின் உச்சித்திலகமாகிறான். அவளைச் சரணடைந்தால் எங்கும் வெற்றி! எதிலும் வெற்றி!

(6) சுமங்கலிகளுக்கு முக்கியமானது திலகம். அத்திலகம் நிலைத்திருக்க அன்னையின் அருள் வேண்டும். மன்னனால் ஏற்பட்ட சோதனையில், பட்டர் அம்பிகையின் அருளை உன்னி அக்கினிக் குண்டத்தின் மீதிருந்து 'அரிகண்டம்' பாடுகிறார். அருள் கிட்டவில்லையாயின் கீழே விழுந்து பொசுங்கவேண்டும். அவரது திருமனைவியார் திலகமிழக்க வேண்டும். உதிக்கின்ற செங்கதிரை உச்சித்திலகமாக உடைய நீ அந்நிலையினையா உண்டாக்கி விடுவாய்? என்பது போல் உச்சித்திலகத்தை நினைந்தார்.

(7) கம்பன் அருளிய சரஸ்வதியந்தாதியில் "நல்லருமறையோர் சந்தியில் தோன்றும் தபனன் என்கோ?" என்கின்றார். அதாவது "வேதியர்கள் சந்தியாகாலங்களில் வணங்கும் சூரியன் உருவில் வருவதும் நீதான்" என்கிறார். திருக்கடவூர் மக்கள், அபிராமிபட்டர் குலவொழுக்கத்துக்கு மாறாக நடந்துவருவதாக ஏசினர் அல்லவா? சந்தியாவந்தனத்துக்கு உரிய ஆதவனை உச்சித்திலகமாகவுடைய அன்னையினையே வழிபடும் தனது சமயத்தை எடுத்துக்காட்டுவது போல் உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகமென்றார்.

(8) உதிக்கின்ற செங்கதிரை உச்சித்திலகமாக உடையவள் சந்திரனையும் உதிக்கச்செய்துவிடுவாளன்றோ?

ஆ. உணர்வுடையோர் மதிக்கின்ற மாணிக்கம்.

(1) மாணிக்கம் மிக விலையுயர்ந்த பொருள், சாதாரணமக்கள் அதுபோன்ற செல்வங்களைவிரும்பிப் பெரிதாகமதிக்கின்றனர். ஆனால்

ஞானிகள் — ஆத்மஞான உணர்வுடையவர்கள் அம்பிகையினையே மாணிக்கமாய் மதிக்கின்றனர். சுந்தரர் "மழபாடியுள் மாணிக்கமே" என்று இறைவனைக் குறிப்பிட்டார்.

(2) நவரத்தினங்களைப்பற்றி உணர்வு அல்லது அறிவு பெற்ற வர்கள் அவற்றுள் சிறந்தவற்றையே மதிப்புள்ளவற்றையே தேர்ந்து எடுப்பர். நல்லுணர்வுள்ள ஞானியர் சிறந்த தெய்வமென்று அம்பிகையினையே மதித்துப் போற்றுகின்றனர்.

(3) நவசக்திகளில் மாணிக்கவல்லி என்பவளும் ஒருத்தி. அம்பிகையின் சொரூபம்பற்றிய உணர்வில்லாதவர் இச்சக்தியினை அம்பிகையினின்று வேறுபட்டவர்களாக எண்ணுவர். உணர்வுடைய ஞானிகள் அந்தமாணிக்கவல்லிமுதலிய நவசக்திகள் பரதேவதையின் சொரூபமே என்று மதிக்கின்றனர்.

(4) "சாரதாராத்யா" என்ற லலிதா சகஸ்ரநாம உரையில் "விசாரதர்களால் அல்லது பண்டிதர்களால் ஆராதிக்கப்படுபவள்" என்று பாஸ்கரராயர் ஒரு பொருள் கூறுகிறார். உணர்வுடையோர் மதிக்கின்ற மாணிக்கம் என்பதும் அதற்கிணையான கருத்தாகும்.

(5) மனிதராகப் பிறந்து, மனித உணர்வுகள் பெற்ற அனைவரும் அன்னையினை மதித்து வணங்கவேண்டும். அவ்வாறு மதித்து வணங்காதவர்கள் உணர்வு அற்றவர்கள் – உணர்ச்சியற்றவர்கள் – அதாவது வெறும் ஜடப்பொருள்களே !

இ. மாதுளம்போது

(1) மாதுளம்பூவைப்போன்ற சரீரகாந்தியுள்ளவள்.

(2) " தாடிமீகுஸுமப்ரபா " என்று இதனை லலிதாசகஸ்ரநாமம் குறிப்பிடுகிறது.

(3) மாது உளம் போது என்று பிரித்துப் பொருள்கொண்டால் அன்னையின் அருளுள்ளம் மலர்போன்று மென்மை வாய்ந்தது என்று பொருள்கொள்ளலாம்.

(4) மோப்பக் குழையும் அனிச்சம்போல் அடியார் படும் துயர் கண்டு அவள் வாடுவாள். அதனால் அந்த மாதின் உள்ளம் போது.

(5) 'போது' என்பது மலர்வதற்குத் தயாராக உள்ள ஒருநிலை. அம்பிகை தன்னிடம் சரண் என்று ஒருவார்த்தை சொல்லத் தொடங்குமுன் அருள்செய்யத் தயாரானநிலையில் இருக்கின்றாள். அதனால் அந்த மாதின் உள்ளம் போது.

ஈ. மலர்க்கமலை துதிக்கின்ற மின்கொடி

(1) தாமரை மலரில் உறையும் இலக்குமி மின்னல் கொடி போன்ற அம்பிகையினைத் துதிக்கின்றாள் என்பது பொதுவான பொருள். "ரமாவாணிதம் ஸேவித ஸகலே" என்று ஹரிகேச நல்லூர் ஸ்ரீ முத்தையா பாகவதர் தன் கீர்த்தனையில் குறிப்பிடுகிறார்.

(2) சாதகர்களுக்கு அம்பிகையின் தரிசனம் மின்னல் கொடி போன்று தோன்றி மறைந்துவிடுகிறது. இடையறாத சாதனையின் மூலம் முழுதரிசனத்திற்கு முயலுகிறார்கள். மலர்க்கமலையும் இவ்வாறு முயன்று வருகிறாள்.

(3) இலக்குமி தனது பேரழகை எண்ணிக் கர்வம்கொண்டாள். அதனால் திருமாலைப் பார்த்து ஆணவமாய்ச் சிரித்தாள். அதனை உணர்ந்த திருமால் சினந்தார். "அழகான வடிவால் செருக்குற்ற நீ அவ்வடிவம் நீங்கி அருபமாக ஆவாய்" எனச் சபித்தார். பின்னர், "காஞ்சியில் இருந்து தவமியற்றிக் காமாட்சியின் குங்குமப் பிரசாதம் பெற்றுப் பழைய உருவம் வரும்" என்று சாபவிமோசனம் அளித்தார். திருமகளும் அவ்வாறே காமாட்சியைத் துதித்துப் போற்றி முன்பு பெற்றிருந்த அழகுருவைப் அடைந்தாள். இன்றும் காஞ்சி காமாட்சி சன்னிதியின் வடக்குப் பக்கத்தில் அருப லட்சுமியைக் காணலாம். இவ்வாறு தன்னுருவம் மீள மலர்க்கமலை துதித்தாள்.

(4) "கன்னிமாடத்திலிருந்து நான் கண்ட இளவரசனே (இராமனே) வில்லை ஒடித்து என்னை மணந்தால் 14 ஆண்டுகள் வானப்பிரஸ்த ஆஸ்ரமத்தில் இருந்து உன்னைப் பூஜிக்கிறேன்" என்று மகாலட்சுமி சீதையாக வந்தபொழுது துதித்தாள் என இராமாயண விற்பன்னர்கள் கூறுவர்.

(5) கண்ணபிரானைக் கணவனாக அடைய விரும்பி, தனது குல தெய்வமான 'காத்யாயனி' அம்பிகையினைத் துதித்து இலக்குமியின் அவதாரமாகிய ருக்மணி வேண்டினாள். அம்பிகையின் திருச்சன்னிதானத்துக்கு வந்தே கண்ணன் அவளை அழைத்துச்சென்று மணந்தான்.

உ. மென்கடிக் குங்கும தோயமென்ன விதிக்கின்ற மேனி

(1) மென்மையான வாசனை பொருந்திய குங்குமக் கலவை போன்ற திருமேனியுடையவள் அபிராமி. இதனையே மூககவி "காச்மீரஸ்தபக கோமலாங்க லதா" என்கிறார். "குங்குமராக சோணே" என்பான் காளிதாஸன்.

(2) வாசனையும் அதிகமானால் தலைவலி கண்டுவிடும். மெல்லிய நறுமணம் எவ்வளவுநேரமானாலும் திகட்டாது. அவ்வாறே அம்பிகையின் திருமேனி காணக்காணத் திகட்டாத அழகுப் பெருவெள்ளமாக அல்லது சௌந்தரியலஹரியாக இருக்கிறது. ஆகவே " மென்கடிக் குங்கும தோயமென்ன விதிக்கின்ற மேனி ' என்றார்.

(3) அம்பிகைக்குரிய உபசாரமாக அறுபத்துநான்கு உபசாரங்கள் குறிப்பிடப்படுகின்றன. "பலம் பத்ரம் **தோயம்**" என்ற முறைப்படி தோயமென்னும் வாசனைக்கலவை அளித்து அம்பிகையை உபசரிக்கவேண்டும். இப்பாடலில் தன் மனத்தாலும் வாக்காலும் தோயம் அளிக்கிறார்.

(4) அம்பிகையின் திருமேனிக்கு அபிராமி பட்டர் ஒவ்வொரு உவமையாகக் கூறிப்பார்த்தார். ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குறை தோன்றியது. அதாவது, உதிக்கின்ற செங்கதிர் சிறிதுநேரமானால் வெப்பங்காட்டுகிறது !

மாணிக்கமென்றால் அது வன்மையானது ! மாதுளம் போது சிறிது நேரத்தில் வாடிவிடுகிறது ! மின்னல்கொடி என்றாலோ விநாடியில் அது மறைந்துவிடுகிறது !

குங்குமதோயமும் மணமிழந்துபோய்விடுகிறது.

இப்படி இப்பொருள்கள்யாவும் முற்றும் பொருந்ாதவைகளாகவே இருக்கின்றன. ஆனால் அவை ஒவ்வொன்றும் அம்பிகையின் ஒவ்வொரு இயல்பைக்காட்டும் திருஷ்டாந்தமாக அமைகின்றன. ஆகவே நூலோர் அவற்றை ஏற்றவையாக விதிக்கின்றனர்.

ஊ. அபிராமி என்றன் விழுத்துணையே !

(1) "ரம்யதீதிராம:" என்று இராமனின் பெயருக்கு விளக்கம் கூறுவர். அதாவது உயிர்களைத் தன்னழகில் ரமிக்கச்செய்பவன் அல்லது கவர்பவன் என்றுபொருள்.

அவ்வாறே சகல புவனங்களையும் கவரும் கவர்ச்சியுடையவள் அபிராமி எனப்பட்டாள். ராமி என்றால் அழகுடையவள். அபிராமி என்றால் பேரழகுடையவள்.

(2) நம் வாழ்வில் ஒவ்வொருவரும் குறிப்பிட்டநிலையில், குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட காரணத்துக்காகத் துணையாக வருகிறார்கள். ஆனால் அம்பிகை எல்லாப் பிறவியிலும் எல்லாக் காலத்தும் கைவிடாத துணையாக வருகிறாள்.

(3) அநேக பரிவாரங்களுடன்வந்து தன்னைச் சோதிக்கும் மன்னன் தான் (அபிராமிபட்டர்) ஒரு தனியாள் என்று நினைக்கவேண்டாம். மிகச்சிறந்த துணையாகிய - கைவிடாத துணையாகிய அபிராமியின் பாதங்களைப் பற்றியிருக்கிறேன். அவள் இன்று நிலவினைக்காட்டி இடரைக் களையத் துணைநிற்பாள் என்று நம்பி 'விழுத்துணை' என்று ஆணித்தரமாகக் கூறுகிறார்.

ஏ. சீமந்தஸரணி செல்வம் தரும்

பெண்கள் உச்சித் திலகம் சூட்டிக்கொள்ளும் 'சீமந்தஸரணி", பசுவின் பின்புறம், யானையின் மத்தகம் ஆகிய மூன்று இடங்களிலும் மகாலக்ஷ்மி நித்யவாசம் செய்கிறாள் என்பது சாஸ்திரக் கருத்து. அம்மூன்றையும் வணங்க வற்றாத செல்வம் கிட்டும்.

இப்பாடலில் அந்த உச்சித்திலகம் சூடும் சீமந்தஸரணியை அபிராமிபட்டர் நினைந்தார். அதன் பலனாக. பின்னர் சரபோஜி மன்னனிடமிருந்து மானியங்கள் பெற்றார். இன்றும் அதிலிருந்து வருவாய் பெறுகின்றனர் அவரது சந்ததியினர்.

ஆகவே இப்பாடலைப் பாராயணம் செய்பவருக்கும் பெருஞ்செல்வம் கிட்டும் என்பது திண்ணம்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagateswaraswamy Devasthanam, Tirukkadaiyur.

Fortunate to have Dharsan of the Merciful Lord and the Mother. I pray them to give all of us a peaceful life and to bless us with prosperity

(S-d) D. Gangappa
Dist. Collector of Thanjavur.

நெஞ்சே நீகேள் !

பேராசிரியர், திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ.,

" எத்துன்பம் எந்நேரம் எப்படிவந் துற்றாலும்
அத்துன்பம் ஆன்மபலன் அல்லவோ ! — மத்திருக்க
வந்திருக்கும் வெண்ணெயை வாளாது வந்ததென்றால்
நொந்திருக்கும் உன்னுள்ளம் பார் " (1)

" பாசத்தை விட்டுவிட்டுப் பாமரனாய் ஆகிவிடு !
நேசத்தை நீநினையேல் நெஞ்சமே ! — மோசமில்லை
எங்கும் பரம்பொருளின் இன்பம் நிலைத்திருக்க
மங்கும் உலகை மற " (2)

" செயலில் குறையில்லை ! சிந்தை குறைவே !
மயலில் மயங்கிவிடும் நெஞ்சே ! — வயலில்
விளைத்த விதையின்றி வேறொன்று காணாய்
முளைத்த வழியும் அறி ! " (3)

" ஆசையே துன்பத்தின் ஆணிவேர் என்றெண்ணி
ஓசையே இல்லாமல் ஓய்ந்துவிடு — ஆசையே
உன்வாழ்வில் வந்துவிட்டால் ஓய்வில்லாத் துன்பங்கள் !
மன்வாழ்வும் மண்ணாகும் பார் " (4)

" கல்லாமை நல்லதெனக் கட்டாயம் சொல்லிடுவேன்
புல்லாண்மை பூக்கின்ற பூவுலகே — நில்லாதே !
எல்லாரும் எல்லாமும் ஏய்க்கின்ற காலமதில்
கல்லாவான் நம்பெருமான் காண் " (5)

" நீதிநூல் கொஞ்சமில்லை ! போதிப்போர் பஞ்சமில்லை !
பாதிதான் போதுமென்றும் பார்த்துவிட்டோம் — கோதின்றி
நல்லபல நூல்கற்றும் நல்லோர்க்குப் பஞ்சமுண்டு
எல்லை இதற்கில்லை ஏன் ? " (6)

செய்திகள்

ஆயில்யத்திருநாள் வழிபாடு

தருமையாதீனம் இருபத்தாறுவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு. 29—2—80 வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் காரைக்கால் அம்மையார் திருக்கோயிலிலும், காலை 9 மணியளவில் திருத்தருமபுரம் அருள்மிகு யாழ்மூரிநாதர் ஆலயத்திலும், மாலை 6 மணியளவில் திருநள்ளாறு அருள்மிகு தர்ப்பாரண்யேசுவரர் ஆலயத்திலும் நடைபெற்றது. அவ்வத்திருக் கோயில்களில் சுவாமி அம்பாளுக்கும் மற்றுமுள்ள மூர்த்திகளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்தன. தலத்திருப்பதிகங்கள் பாராயணஞ் செய்யப்பெற்றன.

ஆதீன வெளியீடாக அச்சிடப்பெற்ற தலத்திருப்பதிக வெளியீடு வழிபாட்டின்போது அன்பர்களுக்கு வழங்கப்பட்டது. திருத்தருமபுரத்தில் காலை 10 மணியளவில் தருமையாதீனக் கல்லூரி முதல்வர், வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர். எம். ஏ., "திருமுறைப் பெருமை" என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினர். மாலை திருநள்ளாற்று வழிபாட்டின்போது, திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவர சுவாமி தேவஸ்தான நிர்வாக அதிகாரி திரு. மு. சதானந்தம் தொடக்க உரை நிகழ்த்தினர். காரைக்கால் மாவட்ட முன்சீப் திரு. வீரநாத் ராவ், பி. ஏ., பி. எல்., தலைமையில், நெடுங்காடு அரசு உயர்பள்ளித் தமிழாசிரியர் திரு. ஆர். என். சீனிவாசன் பி. ஏ., 'நாயன்மார்கண்ட நன்னெறி' என்பது பற்றியும், தருமையாதீனக் கல்லூரி முதல்வர் வித்துவான் திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம்.ஏ., "திருநள்ளாற்றின் சிறப்பு" என்பது பற்றியும் விரிவுரைகள் நிகழ்த்தினர். அன்பர்கள் பலரும் வந்து தரிசித்தும் கேட்டும் இன்புற்றனர்.

கும்பகோணம் மகாமகப்பெருவிழாவில்

வடஇந்தியத் தீர்த்த விழாவாகிய கும்பமேளாவைப்போலப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தென்னிந்தியாவில் கும்பகோணத்தில் நிகழும் தீர்த்தப்பெருவிழா மகாமகவிழா! இவ்விழா 1—3—1980 சனிக்கிழமை மிகச் சிறப்பானமுறையில் நிகழ்ந்தது பலலட்சம் மக்கள் தீர்த்த நீராடினார்கள்.

அன்று காலை தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆதீனத்தில் ஆத்மார்த்தபூஜை முடித்து, அடியார்கள் புடைசூழ, அலுவலர் உடன்வரக் கும்பகோணத்திற்கு எழுந்தருளி னார்கள்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ தருமகாசந்நிதானம் எழுந்தருளியிருப் பதற்கென்றே மாவட்ட ஆட்சியாளர் அவர்களால் சிறப்பான முறை யில் தனி இடமாக அமைக்கப்பட்டிருந்த அரசினர் பெண்கள் கல்லூரிப் பகுதியில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கங்கப்பா அவர்களும் மற்றும் உயர் அதிகாரிகளும் நகரப்பெருமக்களும் அறிஞர் களும் குழுமியிருந்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களைப் பூரண கும்ப மரியாதைகளுடன் வரவேற்றனர்; வணங்கி ஆசிபெற்றனர். பிறகு, தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீ காசிவாசி சுவாமிகளும் அன்பர்களும் புடைசூழ, திருமுறைமுழக்கத்துடனும் மேளவாத்தியங் களுடனும் ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி திருக்கோயிலுக்கு எழுந்தருளி, மூர்த்திகளுக்குப் பட்டுபரிவட்டம் அணிவித்து வழிபாடாற்றினார்கள்.

வழிபாடு முடித்து மகாமகத் தீர்த்தக் கரையில் பிரத்யேகமாக அமைக்கப்பட்டிருந்த விழாப்பந்தலில் எழுந்தருளினார்கள். உலக நலங்கருதி சங்கல்பஞ்செய்துகொண்டு – எல்லாத் திருக்கோயில்களி லிருந்தும் மூர்த்திகள் எழுந்தருளித் தீர்த்தம் கொடுத்தபொழுது – தீர்த்தமாடினார்கள். மகாமகத்தீர்த்தக்கரையில் அந்தணர்களுக்கும், அலுவலர்களுக்கும், திருமுறைப் பணியாளர்களுக்கும் புத்தாடை வழங்கினார்கள். ஸ்ரீ ஆதிகும்பேசுவரசுவாமி தேவஸ்தான அருச்சக ருக்குக் கோதானம் செய்தருளினார்கள். அன்பர்களுக்குத் திருவருட் பிரசாதமும் ஆதீனவெளியீடாக அச்சிடப்பெற்ற மகாமக விழாமலரும் வழங்கினார்கள். அந்தணர்களுக்கும் சிவாசாரியர்களுக்கும் ஓதுவார் களுக்கும் தருமையாதீனத்தின் சார்பில் நண்பகல் உணவு வழங்கப் பட்டது. ஏழைகளுக்கு ஆருயிரம் உணவுப்பொட்டலங்கள் அளிக்கப் பட்டன.

விழாவின்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், கும்பகோணம் கோட்டாட்சியரும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றுதற்குத் தேவையான எல்லா வசதிகளையும் சிறப்பான முறையில் செய்திருந்தமை பாராட்டத்தக்கதாக இருந்தது.

முன்னாள் அறநிலையத்துறை ஆணையர் திரு. மார்க்கண்டவேல் ராஜன், முன்னாள் நடுவணரசு அமைச்சர் திரு. ஓ. வி. அளகேசன்,

பின்னர் புலவர் திரு. A. நாராயணசாமி அய்யர் எல்லோருக்கும் நன்றியுரை கூறியபின் கிருத்திகைப் பிரசாதம் வழங்கப்பட்டது.

மாதாந்தர சமயப்பிரசார வழிபாடு

1980 பிப்ரவரி மாத சமயப் பிரசார வழிபாடு, 24—2—1980 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-00 மணி முதல் 8-30 மணிவரை சென்னை கீழ்ப்பாக்கம் அழகப்பநகர்கோயில் தெருவில் உள்ள ஸ்ரீ பார்வதி அம்மன் சமேத ஸ்ரீ சோமசுந்தரேஸ்வரர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. சுவாமிக்கும் அம்பாளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனை செய்யப்பட்டது. ஆலயத்தில் உள்ள இதர மூர்த்திகளுக்கும், இதைச்சேர்ந்தார்ப்போல் இருக்கும் விஷ்ணு ஆலயத்தில் உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரப் பெருமாளுக்கும் அர்ச்சனை செய்யப்பட்டது. வழிபாட்டின்போது திரு. N. இராமமூர்த்தி அய்யரும், திரு N. இராமலிங்கமும் திருமுறைப் பாராயணம் செய்தனர். வழிபாட்டிற்கு வந்திருந்த அன்பர்கள் அனைவரையும் திரு. R. சிவஞானம் செட்டியார் அவர்கள் வரவேற்று, கூட்டு வழிபாட்டின் சிறப்பை எடுத்துக் கூறினார்கள்.

அடுத்து புலவர் திரு. K. ஆறுமுகம் அவர்கள் நாம் படிப்படியாக ஈடேற இறைவழிபாடு அவசியமாகும். சோழர்கள் காலத்தில் கோயில்கள் சமுதாயக் கூடங்களாக விளங்கின. மக்கள் அனைவரும் வந்து வழிபட்டு, கலந்துரையாடி, துன்பம் நீங்கி இன்பமாக வாழ்ந்தார்கள். மக்களுக்குக் கோயில் உதவி செய்தது. மக்களும் நன்றியுடையவர்களாக இருந்தார்கள். இக்காலத்தில் நன்றியை மறந்தவர்களாக இருக்கிறார்கள். இதையெல்லாம் நாம் சிந்தித்து நன்முறையில் இறைவனை வழிபட்டு மேன்மையடைய வேண்டும். செல்வம் படைத்தவர்கள் வீட்டை வாங்கி, குப்பைகளை அகற்றி, வண்ணம் தீட்டி, விரிப்புகளை விரித்து, மேற்கட்டி முதலியன அமைத்து, வண்ணவிளக்கிட்டு வாழத்தலைப்படுகிறார்கள் இக்கருத்தைப் பட்டினத்தடிகள் ‘கருநாள் தொடங்கி, காமம், வெகுளி, மயக்கம் என்றுசொல்லப்படுகிற குப்பைகளை அரிதின் முயன்று நீக்கி, அன்பால் மெழுகி, அருள் விளக்கேற்றி, மெய்யெனும் மேற்கட்டி அமைத்து, கீழ்மையில் கிடந்த சிந்தைப் பாழறையை இடமாக அமைத்தேன் தாமரைப் பூ விதழை விரித்துள்ளேன், அதில் இமையக் கொழுந்தோடு வந்து அமரவேண்டும்’ என்று இறைவனை வேண்டுகின்றார். நாம் அந்த அருளாளர்கள் சென்ற வழியில் செல்லவேண்டும். அதுதான் பிறவிப்பயனும் ஆகும் என்று பேசினார்கள்.

பின்னர் பேசிய திரு. வ. க. கிருஷ்ணன் அவர்கள் இறை வழி பாட்டின் மேன்மையை எடுத்துக்கூறி, சமயத்தில் நம்பிக்கை வேண்டும், நம்பிக்கை இருக்குமானால் அப்பூதியடிகளின் மகனை உயிர்பெற்று எழச்செய்ததுபோல், இக்காலத்திலும் இறைவன் அருள் செய்வான் என்றுகூறி, வழிபாட்டிற்கு உதவிய கோயில் நிர்வாகத் தினருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

திரு. N. இராமலிங்கம் அவர்கள் கடவுள் வாழ்த்து பாடியபின் கூட்டம் நிறைவுற்றது.

2200 ஆண்டு
பழமையான கோயில் கண்டுபிடிப்பு

தங்கவாடா (ம. பி.) மார்ச் 4. மத்திய இந்தியாவில் நடக்கப் பட்ட அகழ்வாராய்ச்சியில் 2200 ஆண்டுகளுக்கு முந்தைய ஒரு கோயிலும், யாகசாலையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உஜ்ஜைனி விக்ரம் பல்கலைக் கழக தொல்பொருள் துறையும் மத்தியப்பிரதேச அரசு தொல்பொருள் துறையும் கூட்டாகச் சமீபத்தில் இந்த அகழ் வாராய்ச்சியை நடத்தின.

கோயிலும், யாகசாலையும் கி. மு. முதலாவது, இரண்டாவது நூற்றுண்டைச் சேர்ந்தவை. சம்பல் ஆற்றின் கரையில் ஆய்வு நடத்தப்பட்டது. புக்கல், சிவன், யட்சினி, சமண தீர்த்தங்கரர், பெண் கடவுள் ஆகிய உருவங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. சுட்ட செங்கற்கள், சாதாரண கற்களுடன் கூடிய கட்டிடங்களும் உள்ளன.

5 மீட்டர் நீளமும் 3 மீட்டர் அகலமும் உடைய சங்கர்காலத் தைச் சேர்ந்த யாகசாலை ஒன்றும் உள்ளது. அரைவட்டவடிவிலும் இலைபோன்ற வடிவிலும் யாக பீடங்கள் உள்ளன. அரிசி, பார்லி, பயறு முதலிய தானியங்கள் கருகிக்கிடந்தன. அருகில் 3 பானைகள் நிறைய தானியங்கள் இருந்தன. தாமிரத்தினாலாகிய மணியும் கிடைத்துள்ளது.

நன்றி. — தினமணி, 5—3—80.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

சித்தார்த்தி௵ பங்குனி௴ 1உ முதல் 30உ முடிய.

(14—3—80 முதல் 12—4—80 முடிய)

சூ	சு		
பு கே	இராசி		
ல சந்			ரா ச செ கு

	செ	ரா	ல
	அம்ஸம்		கு சூ சு சந்
சனி	கே பு		

சித்தார்த்தி௵ மாசி௴ 30உ குருவாரம் திருவோணநக்ஷத்திரம் வணிஜைகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம்முதல் 52 நாழிகை 9 விநாடிக்கு மகர லக்கினத்தில் ஸ்ரீலோகரட்சகரான சூரியபகவான் லோக சுபிட்சார்த்தத்தை முன்னிட்டு கும்பராசியிலிருந்து மீனராசி சங்கிரமணமாகப் பங்குனிமாதப்பிரவேசம் செய்தருளுகிறார். மறுதினம் முதல்தேதி சுக்கிரவாரம் ஷடசீதி புண்ணியகாலமாகும். பங்குனி௴ 4உ சைத்திரசுத்தப்பிரதமை சாந்திரமான வருஷம் ஆரம்பம். அன்றய வாராதிபதி சந்திரபகவான், கலியுகாதி 5081 ரௌத்திரிவருஷத்துக்கு இராஜாவாகிறார். சங்கிரமகால கிரகஸ்திதியின்பலனாவது லோகத்தில் எங்கும் ஸ்திரி ஜனங்களுக்கு நல்லவை ஏற்படும். பசுக்களின் பலன் விருத்தியாகும். நாடுகளில் ஆழ்கிணறுகள் வெட்டுதல், தடாகம் ஏற்படுத்தல், நீர்ப்பாசனவசதிதிட்டமாகுதல் ஆகியவைநடந்துவரும். பருத்தி ஜவுளிகளின் விலைவாசி மலியும். பால்பண்டங்களின் உற்பத்தி பெருகிவரும். தேசங்களில் நீதியான பரிபாலனம் நடந்து பிரஜைகள் க்ஷேமமடைவர்.

உலகிலுள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் பூருவத்திய சுகிர்த புண்ணியத்தின் உயர்வினால்வந்து நித்தியம் சிவபெருமானைப்

பூசித்துத் திருவீற்றுள்ள சிவஞான குருமகான்கள் லோகமெங்கும் சிவபுண்ணிய காரியங்களைச் செய்விப்பார்கள். அன்னார் தம் திருநாவினுல் இறைவன் வாக்காக உரைக்கும் மனுநீதிதர்மங்களின்படி தேசங்களில் ஆளுநர்கள் ஆட்சி நடத்துவர். செங்கோல் உயரும். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள், விசேஷகால உற்சவங்கள் தேவஸ்தானங்களில் தெய்வசேவையாற்றுகின்ற உத்தம சீலர்களின் அரிய முயற்சியால் விமரிசையாக நடைபெறும். சகலகோடி பிரஜைகளும் பக்தியாக தெய்வதரிசனம்செய்து இலட்சுமிகரத்துடன் சீரிய வாழ்க்கை நடத்துவார்கள்.

1. மேஷம் :- அசுவதி - பரணி – கார்த்திகை ¼

(சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. - அ.)

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானங்கள் பலவிதத்தில் வந்துசேரும். பொன் வைடூரியமணி பூஷணத்தையளிக்கும். அரசாங்கக் காரியங்களில் துரிதநிலைமையும் கடமையாற்றுதலும் ஆகும். வீடு வாகனங்களின் அனுபோகபிராப்தி நன்ருக இருந்துவருப. பெற்ரோர் நலன் பந்து மித்திரர் அம்மான்களின் நன்மைகளில் ஓரளவு செலவும் ஈடுபாடும் ஆகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். பங்குனிமீ 22உ 4 நாழிகை 22 விஞடி முதல், 24உ 24 நாழிகை 50 விஞடி வரையில் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபமாகும்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி – மிருகசீர்ஷம் ½

(இ. ஊ. ஏ. - ஒ. வ. வி. வு - வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபிவிருத்தியில் பணவகை லேவாதேவிகளில் சரளநிலைமையை ஏற்படுத்தும். வித்வத்துவம் கலைத்துறைகளில் விசேஷபலனைத்தரும். எல்லாக் காரியங்களும் மதிநுட்பமாகச் செயல்படும் புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஸ்திரிவழியில் செலவினங்கள் இருப்பினும் சந்தோஷம் நிலவும் பங்குனிமீ 24உ 24 நாழிகை 50 விஞடி முதல், 26உ 39 நாழிகை 8 விஞடி வரையில் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ - திருவாதிரை – புனர்பூசம் ¾

(கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ.)

மிதுனராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானங்களில் நல்ல நிலைமையை ஏற்படுத்தும். பூமி இயந்திரங்களில் நற்பல பிராப்தியையளிக்கும். புத்திரி அல்லது

சகோதரத்துக்குச் சுப விசேஷம் நடக்கும். அரசாங்கக் காரியங்கள் துரிதமாகச் செயல்பட்டுவரும். தாம்பத்தியவாழ்வில் சுமுகம் நிலவும்' பங்குனிமீ 26உ 39 நாழிகை 3 விஞடி முதல், 28உ 48 நாழிகை 31 விஞடி வரையில் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபமாகும்.

4. கடகம் :- புனர்பூசம் $\frac{1}{4}$ – பூசம் – ஆயில்யம்.

(ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ.)

கடகராசி 9 பாதங்களும் மிச்சிரபலஞக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானங்கள் வந்துகொண்டிருக்கும். முக்கியத் துவமான விஷயங்களில் இலட்சியத்தன்மையில் செலவும் செய்யும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் பிரபலஸ்திதியாகும். தத்துவஞான விஷயத்தில் இரத்தினபரீக்ஷை செய்தலில் மனம்நாடும். இயந்திர சாதனங்களில் விருத்திபலன் காணும், 16உ க்குமேல் வாகனம் கட்டிட பிராப்தியில் நல்லவை பல ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். பங்குனிமீ 2, 3, 29, 30 தேதி கள் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபமாகும்.

5 சிம்மம் :- மகம் - பூரம் – உத்திரம் $\frac{1}{4}$

(ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே.)

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலஞக நடக்கும் குடும்பாபி விருத்தியில் பணவருமானம் நியாயவழியில் வந்துகொண்டிருக்கும். பூஷணங்களின் பிராப்தியையளிக்கும் ஜீவனேபாயத் தொழில்களில் மேன்மைஸ்திதியை ஏற்படுத்தும். ஒப்பந்தம் அல்லது எழுத்து மூலத்தில் நன்மைகள் ஏற்படும். புத்திரர்களின் கல்வி தொழில் துறைகளில் சிறப்புமிகும். தாம்பத்தியவாழ்வில் சுமுகம் நிலவும். பங்குனிமீ 3உ 34 நாழிகை 23 விஞடி முதல், 5உ 40 நாழிகை 26 விஞடி வரையில் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபமாகும்.

6. கன்னி :- உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

(டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலஞக நடக்கும். குடும்பாபி விருத்தியில் தனவருமானங்கள் வந்துகொண்டிருக்கும். சகோதரர் புத்திரர் பௌத்திரர்களின் சௌகரியங்களில் செலவினங்களும் ஏற்படும். வித்துவத்துவம் கலைத்துறையில் உத்தியோகத்தில் புகழும் உயர்பதவி கிட்டுதலும் ஆகும். மனைவிக்குச் சிரோபாதை நலிவு ஏற்பட்டு உடன்குணமாகும். பங்குனிமீ 5உ 40 நாழிகை 26 விஞடி முதல், 7உ 48 நாழிகை 21 விஞடி வரையில் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

7. துலாம் :— சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானத்தை ஏற்படுத்திவரும். சகோதரருக்கு முன்னேற்ற ஸ்திதி ஏற்படும். பூமி இயந்திரங்களில் விருத்திபலன் ஏற்படும். வித்தியாவியாபாராதி கலைத்துறைகளில் நல்ல ஸ்திதியும் கடைசி வாரத்தில் உத்தியோகத்தில் ஓர் உயர்வும் தரும். எல்லாக்காரியங்களும் வெற்றிகரமாக நடந்துவரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். பங்குனிமீ 7உ 48 நாழிகை 21 வினாடி முதல், 10உ 0-12 வினாடி வரையில் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபமாகும்.

8. விருச்சிகம் :— விசாகம் ¼ - அனுஷம் – கேட்டை.

(தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடந்துவரும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானங்களில் நல்ல நிலைமையை ஏற்படுத்திக்கொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் உயர்வு தரும். இயந்திரசாதனங்களில் அபிவிருத்திபலன் ஏற்படும். வீடு வாகனங்களின் பிராப்தியில் புதுமை ஏற்படும். 23உ அளவில் நரம்புத்தளர்ச்சி அல்லது அஜீர்ணம் ஏற்படும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனை செய்தல் நலம். பங்குனிமீ 10உ 12 வினாடி முதல், 12உ 17 நாழிகை 36 வினாடி வரையில் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபமாகும்.

9. தனுசு :— மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

(யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானம் சீராக இருப்பினும் எல்லாச்சம்பிரதாய விசேஷங்களும் நடந்துகொண்டிருக்கும். சகோதரருக்குப் பொன் மணி பூஷணங்களைத்தரும். இராசிக்குத் தந்தவாயு நலிவு ஏற்பட்டு உடன் குணமாகும். மாதக்கடைசியில் வித்திபாவியாபாராதி கலைத்துறைகளில் நல்லன ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். பங்குனிமீ 12உ 17 நாழிகை 36 வினாடி முதல், 14உ 41 நாழிகை 3 வினாடி வரையில் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபமாகும்.

10. மகரம் :— உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானங்கள் கண்யமாக வந்துகொண்டிருக்கும். சகோதரருக்கு

முன்பிருந்த அல்லல் நீங்குவதாகி நல்லன ஏற்படும். வீடு வசதி கால்நடை வாகனங்களின் சௌகரியம் உண்டாகச்செய்யும். புத்திரர் பௌத்திரர்களுக்குச் சுபவிசேஷம் நடக்கும். சுப்ரமணியசுவாமிக்கு அருச்சனை செய்வதால் இராசிக்குவருகிற விபத்து நீங்கும். தாம்பத்ய வாழ்வில் சுமுகம் நிலவும். பங்குனிமீ 14உ 41 நாழிகை 3 வினாடி முதல், 17உ 9 நாழிகை 12 வினாடி வரையில் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

11. கும்பம் :– அவிட்டம் ½ – சதயம் - பூரட்டாதி ¾

(கு, கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணம் வரவும் செலவும் சரிசமனாக இருந்துவரும். சகோதரர் சகோதரிகளின் நலம் நன்றாக இருந்துவரும். வாகன சுகம் திருப்தியளிக்கும். புத்திரனுக்கு செய்தொழிலில்முன்னேற்றஸ்திதியை உண்டுபண்ணும். அரசாங்கத் தொடர்புள்ள ஸிகித போக்குவரத்தில் 23உ க்குமேல் நன்மை ஏற்படும். தாம்பத்தியவாழ்வில் சுமுகம் நிலவும். பங்குனிமீ 17உ 9 நாழிகை 12 வினாடி முதல், 19உ 38 நாழிகை 20 வினாடி வரையில் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபமாகும்.

12. மீனம் :– பூரட்டாதி ¼– உத்திரட்டாதி – ரேவதி.

(தி. - து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானங்களில் நல்லஸ்திதியை ஏற்படுத்திவரும். நாகரிகப்பொருள் வாங்குவதில் ஓரளவு பணம் முடங்கும். புத்திரர் பௌத்திரர்களின் நலன்கள் நன்றாக இருந்துவரும். பூர்வப்பொருளில் வழக்கு ஏற்படினும் வெற்றிகரமாகும். சிரோபாதை அல்லது நரம்புத் தளர்ச்சி நலிவு ஏற்பட்டு உடன் குணமாகும். தாம்பத்தியவாழ்வில் சுமுகம் நிலவும். பங்குனிமீ 19உ 38 நாழிகை 20 வினாடி முதல், 22உ 4 நாழிகை 22 வினாடி வரையில் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபமாகும்.

தருமையாதீனத்திற்குச் சொந்தமான

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்

திருவிளக்கு அறக்கட்டளை அறிவிப்பு

நிறைமறைக் காடுதன்னில் நீண்டெரி தீபந்தன்னைக்
கறைநிறத்(து) எலிதன்மூக்குச் சுட்டிடக் கனன்றுதூண்ட
நிறைகடல் மண்ணும் விண்ணும் நீண்டவானுலகுமெல்லாம்
குறைவறக் கொடுப்பர்போலும் குறுக்கைவீ ரட்டனாரே.

'வினைதீர்த்தான் கோயில் விளக்கழகு' என்பது பழமொழி. ஸ்ரீ வைத்தியநாதப்பெருமான், ஸ்ரீ தையல்நாயகி, ஸ்ரீ செல்வமுத்துக் குமாரசுவாமி ஆகிய மூர்த்திகள் எழுந்தருளியிருந்து அருள்வழங்கும் பிரார்த்தனைத்தலம் புள்ளிருக்குவேளூர் என்னும் வைத்தீஸ்வரன் கோயில். இத்திருக்கோயில் சந்நிதிகளில் திருவிளக்கிடுவதற்காக ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் 29—1—1977 தைமாதக் கார்த்திகை நன்னாளன்று ரூ. 1001 அறக்கட்டளை நிதியாக வழங்கி இத்திட்டத்தைத் தொடங்கிவைத்தார்கள். அன்றுமுதல் இன்று வரை பக்தர்கள் தனித்தனியே ஆயிரம்ரூபாய் செலுத்தியதன்மூல மாகவும், உண்டியலில் செலுத்திய காணிக்கை மூலமாகவும் இன்று வரை இத்திட்டத்தின்கீழ் 354 நாட்களுக்கு அறக்கட்டளை நிதி சேர்ந் திருக்கிறது. இத்தொகை முழுவதும், அதிக வட்டி கிடைக்கக்கூடிய வகையில் மாயூரம் இந்தியன் வங்கியில் நிலையான முதலீடாகச் சேமிப்புக் கணக்கில் போடப்பட்டுள்ளது. இக்காணிக்கையைப் பக்தர்கள் இந்தியன் வங்கியில் எந்தக்கிளையிலும் கமிஷன் இன்றிச் செலுத்தலாம்.

அவரவர்களும் எந்தெந்தநாளில் திருவிளக்கிடவேண்டும் என்று விரும்பி அறக்கட்டளை அமைத்தார்களோ அந்தந்தநாளில் அவரவர் கள் குடும்பநலம்கருதி எல்லாச் சந்நிதிகளிலும் திருவிளக்கிட்டு ஸ்ரீ கற்பககணேசர், ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி, சுவாமி, அம்பாள் ஆகிய மூர்த்திகளுக்கு அருச்சனைசெய்து நேரில் வருபவர்களுக்கு நேரிலும், நேரில் வராதவர்களுக்கு அஞ்சல் மூலமாகவும் திருவருட் பிரசாதம் வழங்கப்பெற்றுவருகின்றது. வரும் ரௌத்திரி ஆண்டு வைகாசித்திங்கள் 29 ஆம்நாள் (11—6—1980) புதன்கிழமை மண்டலாபிஷேக் கார்த்திகை நன்னாளில் இத்திட்டம் நிறைவுபெற இருக்கிறது. ஆதலின் திருவிளக்கீட்டுப் பணியில் பங்குகொள்ள

விரும்பும் பக்தர்கள் குறித்தநாளுக்குள் அறக்கட்டளைக்குரிய தொகையினைக் காணிக்கையாகச் செலுத்தி ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி, ஸ்ரீதையல்நாயகி உடனுறைய ஸ்ரீவைத்தியநாதப்பெருமான் திருவருளைப் பெற்று உய்வார்களாக.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின்
உத்தரவுப்படி,

வேளூர் தேவஸ்தானம்
வைத்தீஸ்வரன் கோயில்
10—3—80.

வித்துவான் இராமலிங்கத் தம்பிரான்,
கட்டளை விசாரணை.

பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம்

ஈஸ்வரனையும் அம்பாளையும் முதன்முறையாகத் தரிசித்தேன். மனதில் ஒரு பெரிய நிம்மதி அமைதியின் மூலம் கிடைத்தது. அர்த்தம் விளங்கக்கூறிய மந்திரங்களும் தமிழ்ப் பாடல்களும் இந்த சாந்தியை மனதில் ஏற்படுத்த மிக ஏதுவாய் இருந்தது. தம்பிரான் சுவாமிகளுக்கும் அவர்களுடைய ஊழியர்களுக்கும் என் நன்றி கலந்த வணக்கம்.

ப. க. செந்தாமரை,
2—3—80. தலைவர், போலீஸ்துறை, சென்னை.

★ ★ ★

மனத்தூய்மையும் ஒழுக்கசீலமும் ஒருங்கே பக்தர்களை வந்தடைய அமிர்தகடேசுவரரும் அம்பாளும் தங்கள் தரிசனத்தின் அகலாத அன்பினை ஊட்டி சைவசமயம் வளர ஸ்ரீமத் தம்பிரான் சுவாமிகளும் ஆலய அலுவலர்களும் காட்டும் பரிவும் கடமையுணர்ச்சியும் மெய் சிலிர்க்கவைக்கின்றது. இத்தகைய அன்பர்கள் ஆதரவில் சமயம் மேலும் மேலும் வளர வழிவகுக்கப்படும். வளர்க இத்தொண்டு.

க. ச. லோகவிநாயகம்,
2—3—80 தலைமைப் பொறியாளர், சென்னை.

பங்குனிமாதச் சிறப்பு நாட்கள்

14—3—80 வெள்ளி, ஷடசீதி புண்யகாலம். திருவையாறு மாதப்பிறப்பு தீர்த்தம். பிரதோஷம்.

15—3—80 சனி, மாதசிவராத்திரி.

16—3—80 ஞாயிறு, சர்வ அமாவாசை.

17—3—80 திங்கள், தருமை ஸ்ரீவனதுர்க்காதேவிக்கு வசந்த நவராத்திரி விழா ஆரம்பம். தெலுங்குவருடப்பிறப்பு. யுகாதிபண்டிகை.

19—3—80 புதன், திருக்கடவூர் மார்க்கண்டேயர் அசுவதி தீர்த்தம்.

21—3—80 வெள்ளி, கிருத்திகை விரதம். வேளூர், தருமை ஸ்ரீ சண்முகர் கிருத்திகை. வேளூர் சந்திரசேகரர் உற்சவபூர்த்தி. வேளூர் திருபுவனம், திருவாரூர், பேரளம், உய்யக்கொண்டான் திருமலை முதலிய தலங்களில் பங்குனி உத்திர உற்சவம் ஆரம்பம்.

22—3—80 சனி, திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவர சுவாமி சம்வத்ஸர அபிஷேகம். நேசநாயனார் குருபூஜை.

23—3—80 ஞாயிறு, தலைஞாயிறு ஸ்ரீ குற்றம்பொறுத்தீசுவரர் சம்வத்ஸராபிஷேகம்.

24—3—80 திங்கள், திருவையாறு அந்தணபுரத்தில் திருநந்திதேவர் ஜனனம் (திருவாதிரை) இரவு பட்டாபிஷேகம். கணநாத நாயனார் குருபூஜை.

25—3—80 செவ்வாய், திருக்கற்குடி ஸ்ரீ உஜ்ஜீவநாதசுவாமி சம்வத்ஸராபிஷேகம். ஸ்ரீராமநவமி, வசந்த நவராத்திரி பூர்த்தி. திருவையாறு திருமழபாடியில் திருநந்திகேசுவரருக்குத் திருக்கல்யாணம். (புனர்வசு நக்ஷத்திரம்). தருமை ஸ்ரீவன துர்க்காதேவிக்கு தசசண்டி வேள்வி நிகழும்.

26—3—80 புதன், மூனையடுவார் நாயனார் குருபூஜை.

28—3—80 வெள்ளி, பிரதோஷம்.

30—3—80 ஞாயிறு, பங்குனி உத்திரம், வேளூர், திருவையாறு முதலிய தலங்களில் பங்குனி உத்திர தீர்த்தம், தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் ரௌத்திரி வருடத்திய குருபூஜை விழாவின் திருமுகம் ஒப்பமிட்டுப் பூஜையில் வைத்தருளல்.

31—3—80 திங்கள், பௌர்ணமி விரதபூஜையில் தயிர் அபிஷேகம். திருநின்றியூர் ஸ்ரீ லட்சுமிபுரீசுவர சுவாமிக்கும் திருமுல்லை வாசல் ஸ்ரீ முல்லைவனநாத சுவாமிக்கும் சம்வத்ஸர அபிஷேகம்.

2—4—80 புதன். காரைக்காலம்மையார் குருபூஜை.

5—4—80 சனி, சீகாழி ஸ்ரீ பிரமபுரீசுவரசுவாமி சம்வத்ஸராபிஷேகம். தருமையாதீனம் 21 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்தா தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை.

8—4—80 செவ்வாய், திருக்கடவூர் ஸ்ரீ முனீசுவர பூஜை. காளாஷ்டமி.

11—4—80 வெள்ளி தண்டியடிகள் நாயனார் குருபூஜை.

12—4—80 சனி, மகாபிரதோஷம். தொகையடியார்கள் குருபூஜை.

13—4—80 ஞாயிறு. ரௌத்திரி வருடப்பிறப்பு. மேஷரவி 12-30, விஷுபுண்யகாலம். புதுப்பஞ்சாங்கபடனம்.

The following particulars regarding the ownership of the GNANASAMBANDAM the Monthly newspaper, are published as called for by Rule 8 of the Registration of News papers (Centra Rules, 1956).

Form IV

1. Place of publication - DHARMAPURAM
2. Periodicity of its publication - MONTHLY
3. Printer's and Publisher's Name - Sri V. RAMAIAH PILLAI, Manager, Dharmapuram Adhinam Mutt.

   Nationality - INDIAN

   Address - West Street, Dharmapuram Mayuram P. O.
4. Editor's Name - Vidwan Srimath, RAMALINGA THAMBIRAN SWAMIGAL

   Nationality - INDIAN

   Address - Velur Devasthanam, Vaithiswarankoil.
5. Names & addresses of individuals who own the Newspaper, own partnerships or Share holders holding more than one percent of the total Capital — His Holiness Sri-la-Sri SHANMUKA DESIKA GNANASAMBANDA PARAMACHARYA SWAMIGAL Avl., Tharmapuram Adhinam; Dharmapuram. Mayuram (P.O.) Tamil Nadu.

I, V. Ramaiah Pillai hereby declare that the particulars given above are true to the best of my knowledge & belief.

Dated 24—2—1980.

(Sd.) V. RAMAIAH PILLAI.
Publisher.

Printed & Published by V. Ramaiah Pillai Manager Dharmapuram at the Gnanasambandam Press. Dharmapuram Mayuram 10—3—80